25.09.2015

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

## தேசிய ஆறுகள் பாதுகாப்பு பட்டியல் நொய்யல், வைகை இடம் பிடித்தன



மதுரை: தேசிய ஆறுகள் பாதுகாப்பு பட்டியலில் ஈரோடு நொய்யல், மதுரை வைகை ஆறுகள் இடம் பிடித்தன. உச்சக்கட்டமாக மாசடைந்துள்ள இவற்றை மீட்க தேவையான நிதியை ஒதுக்கவும் மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் ஒப்புதல் வழங்கியுள்ளது. பழமையும், புராதன சிறப்பும் மிக்க ஆறுகள் கணக்கெடுப்பை 2014 - 15ல் மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் நடத்தியது. தமிழகத்தில் சாயப்பட்டறையின் ரசாயன கழிவுகளால் மாசடைந்து, மண் வளத்தை பாதித்து வரும் ஈரோடு மாவட்டம் நொய்யல் ஆறு, கழிவுநீர் மற்றும் ரசாயன கழிவுகளால் மாசடைந்து வரும், மதுரை மாவட்டம் வைகை ஆறு

இடம் பிடித்துள்ளன. இவைகள் அபாய கட்டத்தில் இருப்பதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவ்விரண்டு ஆறுகள் உட்பட நாடு முழுவதும் அபாய கட்டத்தில் உள்ள ஆறுகளை மீட்கும் நடவடிக்கையை மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் எடுத்துள்ளது. இதற்காக 'தேசிய ஆறுகள் பாதுகாப்பு திட்டம்' ஏற்படுத்தப்பட்டது. இதில் நொய்யல், வைகை ஆறுகள் இணைக்கப்பட்டுள்ளன.

கண்காணிப்பு குழுக்கள்: ஆறுகளை மீட்கும் நடவடிக்கை குறித்து வல்லுனர் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவினர் சுத்திகரிப்பு வசதி இல்லாத சாயப்பட்டறைகளை விரைவில் ஆய்வு செய்யவுள்ளனர். கழிவுகளை ஆறுகளுக்கு திருப்பி விடுவோர், ஆறுகளில் குப்பையை கொட்டுவோர், கனிம வளங்களை திருடுவோரை தடுக்கும் நடவடிக்கை மற்றும் ஆறுகள் கண்காணிப்பு குழுக்கள் அமைப்பது குறித்து ஆய்வு செய்து இறுதி பரிந்துரைகளை மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்திடம் தாக்கல் செய்வர்.

## இளைஞர்களுக்கு'சோலார்' பயிற்சி

காந்திகிராமம்:மத்திய புதுப்பிக்கவல்ல எரிசக்தி அமைச்சகம் சார்பில், தமிழக இளைஞர்களுக்கு ஒரு வார 'சோலார்' பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இந்தியாவில் 2022 க்குள் 'சோலார்' போன்ற புதுப்பிக்கவல்ல எரிசக்தி மூலம் ஒரு லட்சம் மெகாவாட் மின் உற்பத்தி செய்ய மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. இதற்காக தனியாருடன் இணைந்து நாடு முழுவதும் 'சோலார்' மின் உற்பத்தி மையங்கள் அமைக்கும் பணி நடக்கின்றன. இதன்மூலம் 20 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என, தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக ஐ.டி.ஐ.,- டிப்ளமோ முடித்த தமிழக இளைஞர்களுக்கு 'சோலார்' உபகரணங்களை இணைத்தல், பழுதுநீக்குதல் பயிற்சி

அளிக்கப்பட உள்ளது. தமிழகத்தில் இப்பயிற்சியை அளிக்க காந்திகிராம பல்கலையை மத்திய புதுப்பிக்கவல்ல எரிசக்தி அமைச்சகம் தேர்வு செய்துள்ளது. முதற்கட்டமாக, ரூ.15 லட்சம் ஒதுக்கியுள்ளது.காந்திகிராம பல்கலை எரிசக்தி மையத் தலைவர் கிருபாகரன் கூறியதாவது: வாரத்திற்கு 30 மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். மொத்தம் 10 பயிற்சிகள் அளிக்க உள்ளோம். தங்குமிடம், உணவு இலவசம். பெறப்படும் விண்ணப்பம் அடிப்படையில் பயிற்சி தேதி, இடம் அறிவிக்கப்படும். விரும்புவோர் www.ruraluniv.ac.in என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம், என்றார்.

## மின் உற்பத்தி நேற்றைய நிலவரம்

மின் நிலையம் திறன் உற்பத்தி (மெகாவாட்)நீர் -- 44 2,288 1,260 அனல் - 6 4,660 2,280எரிவாயு - 4 516 190மத்திய தொகுப்பு - 11 5,518 2,150காற்றாலை 7,470 70 பிற வகை (எரிவாயு, சர்க்கரை ஆலை, தாவர கழிவு, நாப்தா) 5,700 4,510மொத்தம் 26,152 10,460* உற்பத்தி நிறுத்தம் - 0 * உற்பத்தி துவக்கம் - கல்பாக்கம் அணுமின் நிலையத்தில், 220 மெகா வாட்; எண்ணுார் அனல் மின் நிலையத்தில், 60 மெகா வாட் அலகில், பழுது சரி செய்யப்பட்டு, மின் உற்பத்தி துவங்கியது.

## அதிரவைக்குது 'ஆர்கானிக்' உணவுகள் விலை: உண்மையா... கண்டறிவது எப்படி

மதுரை: 'ஆர்கானிக் உணவு பொருட்கள்' என்ற பெயரில் ஒன்றுக்கு பத்தாக விலை வைத்து விற்கும் வியாபாரிகளால், நுகர்வோருக்கு தரமான, இயற்கையான விளைபொருட்களை கண்டறிய முடியாத நிலை

உள்ளது.

வேளாண்மை துறையில் இணை வேளாண்மை இயக்குனர் கட்டுப்பாட்டின் கீழ், அங்கக வேளாண்மை சான்றிதழ் வழங்கும் அலுவலகங்கள் மாவட்டம் தோறும் உள்ளன. சான்றிதழ் பெறுவதற்கு நிறைய விதிமுறைகள் உள்ளன. இரண்டு ஆண்டுகள் பூச்சிமருந்து தெளிக்கக்கூடாது; அதுகுறித்த பயிற்சியும் அளிக்கப்படுகிறது. வயலை நேரில் பார்த்து அதன்பின் அதிகாரிகள் சான்றளிப்பர். இதுதான் உண்மையான 'ஆர்கானிக் உணவுப்பொருட்கள்'. ஆனால் அரசு சான்றிதழ் பெறாமல், கொய்யாவில் துவங்கி காய்கறி, கீரைகள், சிறு, குறு தானியங்களில் 'ஆர்கானிக்' என்ற பெயரில் வியாபாரிகள் கூடுதல் விலை வைத்து விற்கின்றனர். உடலுக்கு நல்லது என்ற எண்ணத்தில் கூடுதல் விலை கொடுத்து வாங்கும் நுகர்வோருக்கு, இயற்கையான பொருட்கள் கிடைப்பதில்லை.

மானாவாரி நிலத்தில் பெய்யும் மழையை நம்பி, கோடையில் உழுது மழை வரும் போது விதைப்பர். அடுத்த மழையில் பயிர் பிழைத்துக் கொள்ளும். மதுரை மற்றும் சுற்றியுள்ள மாவட்டங்களில் இப்படி மானாவாரி விவசாயத்தில் நிலக்கடலை, எள், கொள்ளு, சாமை, வரகு, கம்பு, மக்காச்சோளம், சோளம், தினை, குதிரைவாலி, கால்நடை தீவனப்பயிர்களை சாகுபடி செய்கின்றனர்.நாட்டுரகங்களில் இயற்கையாகவே பூச்சி, நோய் தாக்குதல் குறைவு, நூற்புழுக்கள் தாக்குதல் குறைவு. தண்ணீர் இல்லாததால் இயல்பாகவே செடிகள் நோய் தாக்குதலை எதிர்த்து வளர்கின்றன. எனவே மானாவாரியில் பூச்சிக்கொல்லி, களைக்கொல்லி, ரசாயன உரங்கள் எதுவும் தேவையில்லை. இவற்றை தொடர்ந்து பயிர் செய்வதும் கிடையாது. ஆறுமாதம் நிலம் சும்மா கிடக்கும். அதன்பின் ஒரு முறை வரகு விதைத்தால் மறுமுறை சோளம், நிலக்கடலை பயிரை மாற்றுவதாலும்

நோய் எதிர்ப்பு சக்தி பெறுகின்றன. இத்தகைய சிறு, குறுந்தானியங்களை விவசாயிகளிடம் கிலோ ரூ.20க்கு வாங்கினால், அவற்றை ரூ.180 வரை விலை வைத்து வியாபாரிகள் விற்கின்றனர். இதனால் விவசாயிகளுக்கும் நஷ்டம், நுகர்வோருக்கும் நஷ்டம் ஏற்படுகிறது. நுகர்வோர்கள் 'ஆர்கானிக்' உணவு விற்பனை நிலையங்களில், அதற்கான அரசு சான்றிதழை சரிபார்த்து வாங்கினால் ஏமாற்றத்தை தவிர்க்கலாம்.

தமிழகத்தில் அங்கக வேளாண்மைக்கு விவசாய பயிற்சிகள் தரப்படுகின்றன. புத்தகங்களும் வெளிவந்துள்ளன. விவசாயிகள் அதற்குரிய சான்றிதழை பெற்று விளைபொருட்களை விற்றால் கூடுதல் விலை கிடைக்கும்.

## ஸ்ரீவி., யில் கனமழை

ஸ்ரீவில்லிபுத்துார்: ஸ்ரீவில்லிபுத்துாரில் நேற்று மாலை 5.00 மணிக்கு பலத்த இடி, மின்னலுடன் மழை பெய்ய துவங்கி 5.45 வரை நீடித்தது. 5 மணிமுதல் நகர்பகுதிகளில் மின்தடை ஏற்பட்டது. ஸ்ரீவி., ரயில்வே ஸ்டேஷனில் உள்ள சிக்னல் மின்னல் தாக்கி செயலிழந்தது. ரயில்வே ஊழியர்கள் அரைமணி நேரம் போராடி பழுதை நீக்கினர்.

இதனால் செங்கோட்டை யிலிருந்து ஸ்ரீவி., வழியாக மாலை 5.25க்கு மதுரை செல்ல வேண்டிய ரயில் 6.40 க்கு பிறகே புறப்பட்டு சென்றது. இதேபோல் மறு மார்க்கத்தில் செங்கோட்டை செல்லும் ரயிலும் 45 நிமிடம் தாமதமாக சென்றது.

## கேரளாவில் வரத்து அதிகரிப்பு: தமிழக சீலா மீன் விலை வீழ்ச்சி

ராமநாதபுரம்:கேரளாவில் வரத்து அதிகரிப்பால் தமிழகத்தில் இருந்து அனுப்பப்படும் சீலா மீன் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.பாக் ஜலசந்தி, மன்னார் வளைகுடா ஆழ் கடல் பகுதிகளில் நவம்பர் முதல் ஏப்ரல் வரை கிடைக்கும் சீலா மீன்கள் கன்னியாகுமரி மாவட்ட பைபர் படகு மீனவர்களால் பிடிக்கப்படுகிறது.

கம்பியால் குத்தி பிடித்து வரும் சீலா மீன்களை கிலோ ரூ.500 வரை வியாபாரிகள் கொள்முதல் செய்து கேரளா, கோவை நகரங்களுக்கு அனுப்புவது வழக்கம். இது தவிர விசைப்படகுகளில் தினமும் சிக்கும் அரை கிலோ பருமன் உடைய சீலா மீன் கிலோ ரூ.140க்கு விலை போகிறது. கடந்த காலங்களில் எப்போதும் இல்லாதளவிற்கு சீலா மீன் விலை வீழ்ச்சியடைந்துள்ளது இதுவே முதல் முறை.

இது குறித்து மீனவர் கூட்டுறவு சங்க நிர்வாகி சுப்ரமணியன் கூறியதாவது:10 ஆண்டுகளுக்கு மேலாக வியாபாரம் செய்து வரும் நான் மீனவர்களிடம் கொள்முதல் செய்யும் மீன்களை கோவை, கேரளா மார்க்கெட்டிற்கு அனுப்பி வருகிறேன். இம்முறை கிலோ ரூ.150 வரை சீலா மீன் விலை குறைந்துள்ளது. அரபிக்கடல் பகுதியில் தடைக்காலம் நீக்கத்திற்கு பிறகு கோவை மார்க்கெட்டிற்கு கேரளா, கர்நாடகா பகுதிகளில் இருந்து

சீலா மீன் வரத்து அதிகரிப்பால் தமிழகத்தில் இருந்து அனுப்பப்படும் மீன்கள் விலை கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளதால் மீனவர்களின் வருமானம் குறைந்துள்ளது என்றார்.

## சுற்றுலா தினம் கொண்டாட 32 மாவட்டங்களுக்கு நிதி

உலக சுற்றுலா தினத்தை, விமரிசையாக கொண்டாட, 32 மாவட்டங்களுக்கு தலா, 35 ஆயிரம் ரூபாயை, தமிழக அரசு ஒதுக்கியுள்ளது.கடந்த, 1980 முதல், ஒவ்வொரு ஆண்டும் செப்., 27ம் தேதி, உலக சுற்றுலா தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. வரும்,

27ல், உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு, தமிழ்நாடு சுற்றுலாத் துறை கருத்தரங்குக்கு ஏற்பாடு செய்துள்ளது. இதில், சுற்றுலா ஆப்பரேட்டர்கள், நட்சத்திர ஓட்டல் நிர்வாகிகள், முகவர்கள், வழிகாட்டிகள் பங்கேற்கின்றனர்.

பிரபல கல்லூரிகளில், சுற்றுலா குறித்து கட்டுரை, ஓவியம், பேச்சுப் போட்டி நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட உள்ளன. சென்னை, மெரீனா கடற்கரையில், மாணவர்கள் பங்கேற்கும் பேரணியும் நடக்கிறது.தமிழ்நாடு சுற்றுலாத்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:இந்த ஆண்டு, உலக சுற்றுலா தின கருப்பொருளுக்கு, 'ஒரு கோடி சுற்றுலா பயணிகள்; 1 கோடி வேலை வாய்ப்புகள்' என, பெயரிடப்பட்டுள்ளது. இந்த தினத்தை கொண்டாட, 32 மாவட்டங்களுக்கு தலா, 35 ஆயிரம் ரூபாயை, தமிழக அரசு ஒதுக்கியுள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

## சிறுமலை அடிவாரத்தில் 11 ஏக்கரில் நாட்டுப்புறவியல் அருங்காட்சியகம்

காந்திகிராமம்: திண்டுக்கல் சிறுமலை அடிவாரத்தில் 11 ஏக்கரில் திறந்தவெளி நாட்டுப்புறவியல் அருங்காட்சியகம் அமைக்கப்பட உள்ளது.தென்மாவட்டங்களில் காணப்படும் நாட்டுப்புற கலைகள், சிற்பங்கள், வரலாற்று எச்சங்கள், கலாச்சாரம், பழக்கங்கள் ஆகியவற்றை தொகுத்து வைக்க சிறுமலை அடிவாரத்தில் 11 ஏக்கரில், காந்திகிராம பல்கலை சார்பில் திறந்த வெளிநாட்டுப்புறவியல் அருங்காட்சியகம் அமைக்கப்பட உள்ளது. இதற்காக பல்கலை மானியக்குழு ரூ.70 லட்சம் ஒதுக்கியுள்ளது.இதில் அழிந்து வரும் நாட்டுப்புற கலைகள், புராதன சின்னங்கள், சிற்பக்கலை, பழமையான தொழில்கள், வரலாற்று எச்சம் போன்ற வற்றின் உருவங்கள் தத்ரூபமாக அமைக்கப்பட உள்ளன. மேலும் அவற்றின் ஆடியோ, வீடியோக்களும் 'டிஜிட்டல்' முறையில்

உருவாக்கப்பட உள்ளன. இதற்காக பல்கலை துணைவேந்தர் நடராஜன் தமிழ் பேராசிரியர்கள் பத்நாபபிள்ளை, ராஜரத்தினம், முத்தையாக ஆகியோரை கொண்ட குழுவை அமைத்தார். இக்குழு தென்மாவட்டங்கள் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு நாட்டுப்புறவியல் தொடர்பான தகவல்களை சேகரித்து வருகின்றனர். விரைவில் அருங்காட்சியக பணிகள் துவங்கப்படும் என, அக்குழுவினர் தெரிவித்தனர்.

## ஏலத்தில் கலந்து கொண்ட வியாபாரிகள் இருவர் மட்டும்! இளநீர் மையத்திற்கு வந்தது மூன்றாம் தரம்

பொள்ளாச்சி: திப்பம்பட்டி இளநீர் மையத்துக்கு வரும் இளநீர்களில், மூன்றாம் தரம் மட்டுமே கொண்டு வருவதால் வியாபாரிகள் வரத்தும், விலையும் குறைந்து போனது.

பொள்ளாச்சி - உடுமலை ரோட்டில் உள்ள திப்பம்பட்டியில், தென்னை சாகுபடியாளர்களுக்காக, தமிழக அரசின் 'இளநீர் ஏல மையம்' கடந்த சில வாரங்களுக்கு முன் துவங்கியது.

விவசாயிகளுக்கு எதிர்பார்ப்பையும், நம்பிக்கையையும் ஏற்படுத்திய இம்மையம் துவங்கிய நாளில், விவசாயிகள், வியாபாரிகள் வரத்து அதிகம் காணப்பட்டது.

பலத்த போட்டிக்கிடையே இளநீரும் ஏலம் விடப்பட்டது. நல்ல தரமான இளநீர் ஏலத்துக்கு வந்ததால், 21 ரூபாய் வரை ஏலம் போனது. இதை நம்பி அடுத்தடுத்த வாரங்களில் இளநீர் வரத்து அதிகமானது.

ஆனால், வியாபாரிகளின் எதிர்பார்ப்பு ஏமாற்றத்தையே கொடுத்தது. ஏலத்துக்கு வந்த இளநீர்கள் பெரும்பாலும் இரண்டாம், மூன்றாம் ரகமாகவே காணப்பட்டன. இதனால், ஏலம் எடுக்க தயங்கிய வியாபாரிகள், ஏல மைய மற்றும் பொள்ளாச்சி ஒழுங்குமுறை,வணிக விற்பனை அதிகாரிகளின் வேண்டுகோளுக்கிணங்க ஏலத்தில் கொள்முதல் செய்தனர்.

ஏலத்துக்கு கொண்டு வரப்படும் இளநீருக்கு நல்ல விலை கிடைக்கும்; விவசாயிகளுக்கு நல்ல எதிர்காலம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அடுத்தடுத்த வாரங்களில் நடந்த ஏலத்தில் வியாபாரிகளின் வரத்து வெகுவாக குறைந்து போனது. வரவேற்பு இல்லாததால், விவசாயிகளும் குறைந்து விட்டனர்.

ஆனாலும், வாராவாரம், குறைந்தளவில் இளநீர் வரத்து இருந்து கொண்டுதான் இருந்தது. ஆனாலும், வியாபாரிகள் இளநீரின் தரத்தை வைத்து ஏலம் எடுக்கவே தயங்கி வந்தனர்.

அதிகாரிகளும் அடுத்தடுத்து,'தரமான, முதல் ரக இளநீரை ஏலத்துக்கு கொண்டு வர வேண்டும். அப்படி வந்தால் வியாபாரிகளின் வரத்தும் அதிகம் இருக்கும். விலையிலும் கூடுதல் கிடைக்கும்' என, பலமுறை தெரிவித்தும் தொடர்ந்து தரமில்லாத இரண்டாந்தரம், மூன்றாம்தர இளநீர்களையே விவசாயிகள் கொண்டு வருகின்றனர். 'வியாபாரிகளும் இளநீரை மிகக்குறைந்த விலைக்கு ஏலம் கேட்பதால், விவசாயிகளுக்கு அதிருப்தியை கொடுத்துள்ளது. வியாபாரிகளும் கடும் அதிருப்தியில் ஏலம் எடுக்கின்றனர்," என்றனர்.

இந்நிலையில், நேற்று நடந்த ஏலத்தில் மூன்று விவசாயிகள் பங்கேற்று, ஏலத்துக்கு 846 இளநீர்களை கொண்டு வந்தனர். தரமில்லை என முன்கூட்டியே அறிந்து கொண்ட வியாபாரிகளில் இருவர் மட்டுமே

ஏலத்தில் கலந்து கொண்டனர். இவர்களும், 9 - 13 ரூபாய் வரையில் இளநீரை ஏலத்தில் எடுத்தனர். கடந்த வாரம் ஒரு இளநீர், 14 ரூபாய் வரை ஏலத்தில் விடப்பட்டது குறிப்பிடத்தக்கது. நேற்றைய ஏலத்துக்கு, ஏலமைய மேற்பார்வையாளர்களாக கருப்பையா, மணிவாசகம் மற்றும் உதவிஅலுவலர் சுந்தரராஜன் ஆகியோர் செயல்பட்டனர்.

**பருவமழையை விவசாயிகள் ஆவலுடன் எதிர்பார்ப்பு! சம்பா பயிரை காப்பாற்ற முடியாமல் தவிப்பு**




கடலூர்: டெல்டா பாசன பகுதியில் சம்பா பட்டத்திற்கு நேரடியாக விதைத்த நெற்பயிர்களும், நாற்றங்கால்களும் தண்ணீரின்றி வாடுவதால், விவசாயிகள் வடகிழக்கு பருவமழையை ஆவலுடன் எதிர்நோக்கி காத்திருக்கின்றனர்.

கடலூர் மாவட்டத்தில் விவசாயமே பிரதான தொழிலாக உள்ளது. இயற்கையாக ஜூன் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை பெய்யும் தென்மேற்கு பருவமழையில் குறுவை சாகுபடியும், அக்டோபர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை பெயும் வடகிழக்கு பருவ மழையைப் பயன்படுத்தி சம்பா சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

மாவட்டத்தில் கோடை காலத்தில் (மார்ச் முதல் மே மாதம் வரை) சராசரியாக 95.7 மி.மீ., மழை பெய்ய வேண்டும். ஆனால், இந்தாண்டு 61.34 மி.மீ., அளவே மழை பெய்தது. மேலும், கோடை காலத்தைத் தொடர்ந்து நடைபெற்று வரும் தென்மேற்கு பருவமழைக் காலமான ஜூன் மாதம் முதல் இதுநாள் வரை கோடை வெயிலையும் மிஞ்சும் வகையில் சுட்டெரித்து வருகிறது. தென்மேற்கு பருவமழைக் காலத்தில் 346.8 மி.மீ., அளவு மழை பெய்ய வேண்டும். ஆனால், நேற்றுவரை 275.8 மி.மீ., அளவே மழை பெய்துள்ளது. இதனால், இந்தாண்டு நெல் பயிரிட முடியுமா என்ற ஏக்கம் விவசாயிகள் மத்தியில் மேலோங்கியது.

இந்நிலையில், மேட்டூர் அணையில் இருந்து கடந்த ஆகஸ்ட் 9ம் தேதி முதல் பாசனத்திற்காக வினாடிக்கு 13 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது. அதனையொட்டி கடந்த 3ம் தேதி முதல் கீழணையிலிருந்து கடலூார் மாவட்ட டெல்டா பாசன பகுதிகளுக்கு தண்ணீர் திறந்த விடப்பட்டு வருகிறது.

இதனால், மகிழ்ச்சி அடைந்த டெல்டா பகுதியில் உள்ள 70 சதவீத விவசாயிகள் நேரடி நெல் விதைப்பும், 10 சதவீத விவசாயிகள் நாற்றங்கால் விட்டுள்ளனர். மீதமுள்ள 20 சதவீத விவசாயிகள் டெல்டா பாசனத்தின் கடைமடைபகுதியில் உள்ளதால், அங்கு இன்னமும் தண்ணீர் செல்லாததால் நாற்று விடும் பணியை இதுவரை துவங்காமல் உள்ளனர்.

இந்நிலையில் கடந்த மூன்று வாரமாக மழை பெய்யாத நிலையில், கோடை காலத்தை மிஞ்சும் வகையில் வெயில் சுட்டெரித்ததால், நீர் நிலைகளில் நீர் மட்டம் வெகுவாக குறைந்தது. கீழணை மற்றும் வீராணம் ஏரியிலிருந்து போதிய அளவு தண்ணீர் திறந்து விடப்படாததால், நேரடி நெல் விதைப்பு செய்துள்ள பயிர்களும், நாற்றங்கால்களும் தண்ணீரின்றி கருகத் துவங்கியுள்ளதால், விவசாயிகள் செய்வதறியாமல் தவித்து

வருகின்றனர். பயிரை காப்பாற்றிட கூடுதல் தண்ணீர் திறந்து விடக்கோரி டெல்டா பாசன பகுதிகளில் விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அதனையொட்டி பொதுப்பணித்துறை அதிகாரிகள், இருக்கும் நீரைக் கொண்டு நிலைமையை சமாளிக்க முறைப்பாசனம் செய்வது குறித்து விவசாயிகளிடம் கருத்துக் கேட்டுள்ளனர்.

அதனால், ஓரிரு நாளில் முறைப்பாசன முறையில் கிடைக்கும் தண்ணீரைக் கொண்டு முளைப்பு விட்டுள்ள நெற்பயிரை ஓரளவிற்கு காப்பாற்றலாம் என்ற நம்பிக்கை விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

அதேநேரத்தில் தற்போதே கீழணை மற்றும் வீராணம் ஏரியில் தண்ணீர் குறைவாக உள்ளதால், எதிர் வரும் அக்டோபர் மாதம் துவங்க வேண்டிய வடகிழக்கு பருவமழை கை கொடுக்குமா என்ற எதிர்பார்ப்பு விவசாயிகள் மத்தியில் மேலோங்கியுள்ளது.

## வேளாண் சங்கத்தின் பயன்பாட்டில் விவசாயிகளின் சேமிப்பு கிடங்கு

பிரையாங்குப்பம் : பிரையாங்குப்பத்தில், விவசாயிகளுக்காக கட்டப்பட்ட சேமிப்பு கிடங்கை, வேளாண் சங்கத்தினர் பயன்படுத்தி வருவதால், விளை பொருட்களை பாதுகாக்க முடியாமல், விவசாயிகள் அவதிப்பட்டு வருகின்றனர்.

கடம்பத்துார் ஒன்றியம், பிரையாங்குப்பத்தில், 2012ம் ஆண்டு, ஜெ.ஜெ., 592 பிரையாங்குப்பம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் மூலம், விவசாயிகள் தங்களது விளை பொருட்களை பாதுகாப்பாக வைப்பதற்காக, சேமிப்பு கிடங்கு கட்டப்படடது. ஆனால், இந்த கிடங்கு திறக்கப்பட்ட நாள் முதல், இன்று வரை, விவசாயிகளின் பயன்பாட்டிற்கு விடாமல், வேளாண் சங்கத்தினர், தங்களது பொருட்களை வைக்கும் கிடங்காக, பயன்படுத்தி வருகின்றனர். இதனால், இப்பகுதியைச் சேர்ந்த விவசாயிகள், தங்களது விளை

பொருட்களை, சேமிப்பு கிடங்கில் பாதுகாப்பாக வைக்க முடியாமல், அவதிப்பட்டு வருகின்றனர்.எனவே, விவசாயிகளுக்காக கட்டப்பட்ட இந்த சேமிப்பு கிடங்கை, விவசாயிகளின் பயன்பாட்டிற்கு கொண்டுவர, அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, கோரிக்கை எழுந்துள்ளது.

## நகராட்சியில் கருவேல மரங்களை அகற்ற நோட்டீஸ்! நிலத்தடி நீரை பாதுகாக்க அதிகாரிகள் முடிவு

திருத்தணி : தற்போது நிலவிவரும், குடிநீர் தட்டுப்பாட்டை போக்கவும், நிலத்தடி நீரை பாதுகாக்கவும், முதற்கட்ட நடவடிக்கையாக, நகராட்சியிலுள்ள கருவேல மரங்களை அகற்ற, மரங்களின் உரிமையாளர்களுக்கும், துறை அலுவலர்களுக்கும், நோட்டீஸ் கொடுக்கப்பட்டு வருகிறது. மேலும், இதுகுறித்து, விழிப்புணர்வு ஏற்படுத்தவும் நகராட்சி நிர்வாகம் முடிவு செய்து, அதற்கான பணியில் ஈடுபட்டு உள்ளது.

திருத்தணி நகராட்சியில் உள்ள, 21 வார்டுகளில், 11,940 குடும்பத்தினர் வசிக்கின்றனர். இங்குள்ள, 193 தெருக்களுக்கு, குழாய்கள் மூலம், நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்குகிறது. மேலும், 147 கை பம்பு, 20 ஆழ்துளை கிணறுகள் மூலம் மின் மோட்டார் அமைத்து, நேரடியாக குழாய்களில் தண்ணீர் வினியோகம் செய்யப்படுகிறது.

16 லட்சம் லிட்டர் : நகராட்சிக்கு, ஒரு நாளைக்கு, 42 லட்சம் லிட்டர் குடிநீர் தேவைப்படுகிறது. ஆனால், தற்போது, அரக்கோணம் கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம், 7 லட்சம் லிட்டர் தண்ணீரும், அருங்குளம் கொற்றலை ஆற்றில் இருந்து, 6 லட்சம் லிட்டர் தண்ணீரும் பெறப்பட்டு,

வினியோகம் செய்யப்படுகிறது.மேலும், 'நகராட்சி தெருக்கள் மற்றும் ஏரியில் அமைத்துள்ள, 100 ஆழ்துளை கிணறுகள் மூலம், 11 லட்சம் லிட்டரும், விவசாய கிணறுகளில் இருந்து, வாடகை டிராக்டர்கள் மூலம், 2 லட்சம் லிட்டர் என, மொத்தம், 26 லட்சம் லிட்டர் தண்ணீர் பெறப்பட்டு, வினியோகம் செய்யப்படுகிறது.மீதமுள்ள, 16 லட்சம் லிட்டர் தண்ணீர் பற்றாக்குறையால், நகரவாசிகளுக்கு, நான்கு அல்லது ஐந்து நாட்களுக்கு ஒரு முறை, குடிநீர் வினியோகம் செய்யப்படுகிறது.

1,102 கருவேல மரங்கள் : கருவேல மரங்களால், நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைவதுடன், அப்பகுதியில் குடிநீர் தட்டுப்பாடும் ஏற்படுகிறது. எனவே, நகராட்சியில் நிலவும் குடிநீர் பிரச்னையை போக்கவும், நிலத்தடி நீரை பாதுகாக்கவும், நகராட்சி நிர்வாகம், 21 வார்டுகளில் உள்ள கருவேல மரங்களை அகற்ற முடிவு செய்தது.இதையடுத்து, நகராட்சி ஊழியர்கள், கடந்த ஒரு மாதமாக, கருவேல மரங்களை கணக்கெடுக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். இதில், 1,102 மரங்கள் இருப்பது தெரிய வந்துள்ளது.

15 நாட்களுக்குள்...

இதுகுறித்து, நகராட்சி ஆணையர் மல்லிகா கூறியதாவது: கராட்சியில், 15 வார்டுகளில் மட்டும், கருவேல மரங்கள் உள்ளன. இந்த மரங்களை அகற்ற வேண்டும் என, மரங்களின் உரிமையாளர்களுக்கு நோட்டீஸ் வழங்கி வருகிறோம். மேலும், நீர்நிலைகள், அரசுக்கு சொந்தமான நிலங்களில் உள்ள கருவேல மரங்களை அகற்ற, வருவாய் துறையினரிடம் அனுமதி கோரி உள்ளோம். இதுதவிர, 'கருவேல மரங்களை அகற்ற வேண்டும்; நிலத்தடி நீரை பாதுகாக்க வேண்டும்' என, வரும் அக். 1ம் தேதி முதல், நகராட்சி வாகனத்தில், ஒலி பெருக்கிகள் அமைத்து அறிவிக்கவும், துண்டு பிரசுரங்கள் வினியோகிக்கவும் ஏற்பாடு செய்துள்ளோம். கருவேல மரங்களை அகற்ற, 15 நாள் காலக்கெடு கொடுத்துள்ளோம். தவறினால் நகராட்சி நிர்வாகமே மரங்களை அகற்ற

நடவடிக்கை எடுக்கும். இதன் தொடர்ச்சியாக, வேலிகாத்தான் செடிகளை அகற்றவும் நடவடிக்கை எடுக்கப்படும்.இவ்வாறு அவர் கூறினார்.

நாய் பிடிக்கும் வாகனத்தில்!

திருத்தணி நகராட்சியில் சுற்றித்திரியும் ஆதரவற்ற நாய்களை பிடிக்க, 8 லட்சம் ரூபாய் செலவில், ஒன்றரை ஆண்டுகளுக்கு முன், சிறப்பு வாகனம் வாங்கப்பட்டது. ஆனால், அந்த வாகனத்தை பயன்படுத்தி, நாய்களை பிடிப்பதில்லை. மாற்றாக, டெங்கு காய்ச்சல், வரி செலுத்துதல், பன்றி காய்ச்சல் போன்றவை குறித்த விழிப்புணர்வு பாதகைகளை அதில் வைத்து விளம்பரம் செய்து வருகின்றனர். தற்போது, கருவேல மரங்களை அகற்றுவது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், இந்த வாகனத்தை பயன்படுத்த உள்ளதாக, நகராட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## விவசாயிகளுக்கு மானியம் வழங்கும் திட்டம் துவக்கம்

திருவள்ளூர் : திருவள்ளூர் மாவட்டத்தில், நடப்பு சம்பா பருவத்தில், 1,23,376 ஏக்கர் நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. விவசாய கூலி தொழிலாளர்களின் பற்றாக்குறையால் நெல் நடவுப் பணிகள் பாதிக்கப்பட்டு வருகின்றன.இதை நிவர்த்தி செய்ய, இயந்திர நெல் நடவு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.இயந்திர நடவு செய்யும் விவசாயிகளுக்கு பின்னேற்பு மானியமாக, 2.47 ஏக்கருக்கு 3,000 ரூபாய் மானியம் வழங்கப்பட உள்ளது. இத்திட்ட துவக்க விழா நேற்று, திருவள்ளூர் அடுத்த, மேலானூர் கிராமத்தில் நடந்தது. நெல் நடவு இயந்திரத்தை இயக்கி நடவு முறையை ஆட்சியர் வீரராகவ ராவ் துவக்கி வைத்தார். பின், புன்னப்பாக்கம் கிராமத்தில், இயந்திர நெல் நடவு செய்யப்பட்ட வயல்களை பார்வையிட்ட ஆட்சியர், பின்னேற்பு மானியத்தினை விவசாயிகளுக்கு வழங்கினார்.

## தமிழகத்தில் உளுந்தம் பருப்பு விலை ஒரே நாளில் குவிண்டாலுக்கு ரூ.800 சரிவு

சேலம்: தமிழக மார்க்கெட்டுக்களுக்கு உளுந்து, உளுந்தம் பருப்பு வரத்து அதிகரித்துள்ளதை அடுத்து, நேற்று ஒரே நாளில் குவிண்டாலுக்கு, 800 ரூபாய் வரை, விலை சரிந்துள்ளது.

தமிழகத்துக்கு தேவையான உளுந்து, உளுந்தம் பருப்பு, மகாராஷ்டிரா, குஜராத், உத்திரபிரதேசம் உள்ளிட்ட வடமாநிலங்களில் இருந்து விற்பனைக்கு வருகிறது. கர்நாடகா, தமிழகத்திலும் நடப்பாண்டு உளுந்து விளைச்சல் எதிர்பார்த்த அளவு இல்லாததால், உளுந்தம் பருப்பு விலையில் வரலாறு காணாத உயர்வு ஏற்பட்டது. கடந்த வாரம், பருப்பு வகைகளின் விலையை கட்டுப்படுத்தும் வகையில், மில்கள், கடைகளில், அதிகாரிகள் ரெய்டு மேற் கொண்டனர். ரெய்டுக்கு பின் உற்பத்தியை நிறுத்தி இருந்த பருப்பு மில்கள், மீண்டும் உற்பத்தியை துவக்கியுள்ளன. சேலம், சென்னை, விருதுநகர் ஆகிய பெரிய மார்க்கெட்டுக்களுக்கு, உளுந்தம் பருப்பு வரத்து அதிகரித்ததை அடுத்து, நேற்று ஒரே நாளில் குவிண்டாலுக்கு, 800 ரூபாய் விலை சரிவு ஏற்பட்டது. இந்த சரிவு மேலும் அதிகரிக்கும் என வியாபாரிகள் தெரிவித்தனர்.

பாசி பருப்பு விலை திடீர் உயர்வு: தமிழகத்தில் துவரம் பருப்பு விலை, உயர்ந்ததை அடுத்து, மக்கள் பாசிப்பருப்பை அதிகளவு பயன்படுத்த துவங்கி உள்ளனர். அதன் விலை, நேற்று குவிண்டாலுக்கு, 400 ரூபாய் உயர்ந்துள்ளது. கடந்த வாரம் முதல் ரகம் கிலோ, 106 ரூபாய்க்கு விற்றது, நேற்று, 110 ரூபாயாகவும், இரண்டாம் ரகம், 102 ரூபாய்க்கு விற்றது, 105 ரூபாயாகவும் உயர்ந்துள்ளது.

## மூலிகை கருத்தரங்கு

பழநி: பழநியாண்டவர் பாலிக்டெக்னிக் கல்லூரியில் மத்திய அரசு மனிதவளமேம்பாட்டு திட்டத்தின்கீழ் மூலிகை பயன்பாடு குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கு நடந்தது.

கல்லூரி முதல்வர் கந்தசாமி தலைமைவகித்தார். ஆடை வடிவமைப்புத்துறை தலைவர் கிருஷ்ணமூர்த்தி முன்னிலை வகித்தார். சமுதாய பாலிக்டெக்னிக் திட்டத்தின் மூலிகை சாகுபடி பயிற்சி பயிற்றுனர் செல்வராஜ் செம்பரத்தை பூ, வெட்சி பூ உள்ளிட்ட பூக்கள், வேலி பருத்தி, அருகம்புல், குப்பைமேனி, இலை, சுக்கு, திப்பிலி, விளாம்பழம் உள்ளிட்டவைகளின் மருத்துவ குணங்களை விளக்கிபேசினார். திட்ட ஒருங்கிணைப்பாளர் அசோகன் உட்பட பலர் பங்கேற்றனர்.

## முருங்கை "பீன்ஸ்' நடும் பணி தீவிரம்

வருஷநாடு: கடமலை-மயிலை ஒன்றியத்தில் கடந்த சில தினங்களாக தொடர் மழை பெய்து வருவதால் மலைப்பகுதிகளில் நீருற்று ஏற்பட்டுள்ளது.

இந்த மழையை பயன்படுத்தி, வருஷநாடு, முத்துநகர், வாலிப்பாறை, தும்மக்குண்டு,வண்டியூர், முருக்கோடை, காமராஜபுரம், காந்திக்கிராமம், தண்டியக்குளம் ஆகிய பகுதிகளில் தற்போது முருங்கை மற்றும் பட்டர் "பீன்ஸ்' நடும் பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

## கோடை மாங்காய் சீசன் தொடக்கம்

பெரியகுளம்,: பெரியகுளம் பகுதியில் கோடை மாங்காய் சீசன் துவங்கியுள்ளது.

ஒரு டன் 50 ஆயிரம் ரூபாய் விலை விற்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

பெரியகுளம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளான சோத்துப்பாறை, கும்பக்கரை, ஈஞ்சமலை, செழும்பு, தொண்டைகத்தி, புலிக்கூடு, கோயில்காடு, முருகமலை, வரட்டாறு, கருங்கல் உட்பட பல பகுதிகளில் 20 ஆயிரம் ஏக்கருக்கு அதிகமான பரப்பில் மா சாகுபடி செய்யப்படுகின்றன.

பெரியகுளம் காளைபாடி, மல்கோவா, பங்கனபள்ளி, சப்போட்டா, காசாகாய், நாட்டுக்காய் உட்பட பல வகையான காய்கள் அறுவடை செய்யப்படுகின்றன. பெரியகுளம் மாங்காய் சுவை அதிகம் என்பதால் அனைத்து ஊர்களிலும் வரவேற்பு பெற்றுள்ளது. அனைத்து வகையான மாங்காய்கள் எடுக்கப்பட்ட நிலையில் ஜூலை மாதம் சீசன் முடிந்தது. இந்நிலையில் ஜூன் மாதம் பூபூத்த கோடை மாங்காய் வரத்து துவங்கியுள்ளது.

சீசன் நேரத்தில் காசாமாங்காய் 1 டன் 20 ஆயிரம் ரூபாயிலிருந்து 25 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையானது. தற்போது கோடையின் ஆரம்பத்தில் காசா விலை 1 டன் 50 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையாகிறது. பிற ரக மாங்காய்கள் சில வாரங்களில் அறுவடைக்கு வரும். காசாலட்டு மாங்காய்கள் அதிகளவில் கேரளாவிற்கும், தமிழ்நாட்டின் பிற ஊர்களுக்கும் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## நன்செய் நிலங்களில் சேற்று நெல் சாகுபடி



நன்செய் நிலங்களில் நெல் பயிரிடுவதில் ஆர்வமுள்ள விவசாயிகள் சேற்று நெல் சாகுபடி முறையைப் பின்பற்றி நல்ல மகசூல் ஈட்டலாம் என வேளாண்மைத் துறை தெரிவித்துள்ளது.

விதையளவு: ஒரு ஹெக்டேர் நடவுக்கு நீண்ட கால ரகம் எனில் 30 கிலோ, மத்திய காலமாயின் 40 கிலோ, குறுகிய கால ரகம் என்றால் 60 கிலோ போதும். விதை நேர்த்தி: ஒரு கிலோ விதைக்கு ஒரு லிட்டர் தண்ணீர் என்ற விகிதத்தில் கார்பன்டஜிம் அல்லது பைரோகுயிலான் 2 கிராம் அல்லது டிரைசைக்லோஜோல் கரைசல் 2 மி.லி. கலந்து 10 மணி நேரம் ஊறவைத்து வடிகட்ட வேண்டும். இதன் மூலம், இளம் வயதில் பாதிக்கும் தோகை எரிப்பு நோயிலிருந்து 40 நாள்வரை பாதுகாப்பு கிடைக்கும் வாய்ப்பு அதிகம் உள்ளது. ஊறவைத்த விதையை உடன் விதைக்க வேண்டுமெனில் நனைந்த கோணிச் சாக்கில் கட்டி 24 மணி நேரம் இருட்டில் வைத்து முளை கட்டியதும் விதைக்கலாம். அல்லது நிழலில் உலர்த்தி தக்க ஈரப்பதத்தில் சேமித்து பின்னர் விதைக்கலாம்.

சூடோமோனாஸ் ஃபுளுரசன்ஸ் கரைசல் ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் ஒரு லிட்டர் நீரில் கரைத்து 10 மணி நேரம் ஊற வைத்து நீரை வடிகட்டி மேற்சொன்ன முறையில் விதைக்கலாம்.

நாற்றங்கால் தயாரிப்பு: தயாரிக்கப்பட்ட நிலம் 2.5 மீ (8 அடி) அகலமுள்ள பாத்திகளாக, 30 செமீ (ஓரடி) இடைவெளியுள்ள வாய்க்கால் பாத்தியைச் சுற்றிலும் அமைக்க வேண்டும். பாத்தியின் நீளம் 8 முதல் 10

மீ வரை நிலத்தின் சமன் அமைப்பு, மண்ணின் தன்மையைப் பொறுத்து அமைக்கலாம். வாய்க்கால் அமைக்கும்போது எடுக்கப்பட்ட மண்ணை பாத்தியில் பரப்பி நிரவலாம்.

விதைப்பு: முளைகட்டிய விதையை பாத்தியில் பரவலாக தூவ வேண்டும். தண்ணீர் அளவு 1 - 2 செமீ அளவு இருத்தல் நல்லது.

நீர் நிர்வாகம்: விதைத்த 24 மணி நேரத்துக்குள் தண்ணீரை வடித்து, விதை முளைக்க சந்தர்ப்பம் தர வேண்டும். தண்ணீர் தேங்காதவாறு பாத்தி அமைப்பும், நீர் நிர்வாகமும் இருக்க வேண்டும்.

விதைத்த 3 முதல் 5 நாள்வரை நீர் கட்டுவது, தண்ணீர் தேங்கி நிற்காதவாறு பார்க்க வேண்டியது அவசியம். நீரின் உயரம் 5 நாளிலிருந்து சிறிது சிறிதாக நாற்றின் வளர்ச்சியைப் பொறுத்து உயர்த்தலாம். அதிகபட்சமாக (ஓரங்குல ஆழம்) நீர் கட்டுவது சாலச் சிறந்தது.

களை நிர்வாகம்: விதைத்த 3 அல்லது 4ஆம் நாளில் களை முளைப்புக்கு முந்தைய களைக்கொல்லி பிரிடில்லாகளோர், சேஃப்பனர் 0.3 கிலோ என்ற அளவில் ஒரு ஹெக்டேர் நாற்றுகளுக்குத் தெளிக்க வேண்டும். களைக்கொல்லி தெளிக்கும் முன்னர் சிறிதளவு தண்ணீர் நிறுத்த வேண்டும்.

தேக்கப்பட்ட நீரை வடிக்கக் கூடாது. தானாகவே மண்ணில் மறைதல் சிறந்தது. விதைத்த 8 நாளுக்குப் பிறகு ஈரப்பதம் இருக்கும் நிலையில் களைக்கொல்லி தெளிக்க வேண்டும்.

உர நிர்வாகம்: 20 சென்டுக்கு 1 டன் தொழு உரம், மாட்டு எரு தேவைப்படும். கடைசி உழவின்போது 20 சென்ட் நாற்றங்காலுக்கு 40 கிலோ டிஏபி உரமோ அல்லது 16 கிலோ யூரியாவும் 120 கிலோ சூப்பர் பாஸ்பேட்டும் கலந்தோ இட வேண்டும். அடியுரமாக டிஏபி இடுவது குறைவான மண் சத்துள்ள நாற்றங்கால்களுக்கு உகந்தது.

நாற்றுகளை 25 நாள்களுக்குப் பின்னர் எடுத்து நட வேண்டிய

நேரங்களில், ரசாயன உரங்களை இட்டு, அதிகபட்சம் 10 நாள்களுக்குள் நாற்றுகள் எடுத்து நட வேண்டும். மிக அதிகமான களிமண் பூமிகளில் நாற்றுகள் எடுக்கும் நேரத்தில் வேர் அழுகும் நிலை ஏற்படின், விதைத்த 10ஆம் நாள் சென்டுக்கு 4 கிலோ ஜிப்சம், 1 கிலோ டிஏபி கலந்து இட வேண்டும்.

புழுதி நாற்றங்கால்: ஆற்றில் தண்ணீர் வருவது பின்தங்கும் தருணத்தில் புழுதி நாற்றங்கால் வரப்பிரசாதமாக அமையலாம். நாற்றங்காலின் பரப்பு, விதை அளவு, விதை நேர்த்தி ஆகியவை சேற்று நாற்றங்காலுக்குக் குறிப்பிட்டதைப்போல பின்பற்ற வேண்டும். நாற்றங்கால் நன்கு உழப்பட்டு 1 முதல் 1.5 மீ அகல பாத்திகளாக அமைக்க வேண்டும். பாத்தியைச் சுற்றிலும் ஓரடி அகல வாய்க்கால் அமைப்பது நல்லது. களிப்பு அதிகமுள்ள மண் வகைகளில் மேட்டுப்பாத்திகள் அமைக்கலாம். மணற்பாங்கான பகுதிகளில் படுக்கைப் பாத்திகள் போதும். நேர்த்தி செய்யப்பட்ட உலர்ந்த விதைகள் தூவப்பட்டு நன்கு மக்கிய மாட்டு அல்லது தொழு உரத்தால் விதைகள் மூடப்பட வேண்டும். மண் நனையும் அளவு நீர் பாய்ச்சுவதோ, தெளிப்பதோ வேண்டும். நான்கு இலைப் பருவம் நடவுக்கு ஏற்றது.

ரசாயன உரமிடுதல்: மண் பரிசோதனை மூலம் தேவையான உரங்களைக் கணக்கிட வேண்டும். இறவை நெற்பயிருக்கு குறிப்பிட்ட வயலுக்கேற்ற உரமிடும் முறை மூலம் மணிச்சத்து, சாம்பல் சத்து இடுவதை நிர்ணயிக்கவேண்டும். மண் பரிசோதனை மூலம் உரங்கள் அளிக்க நேரமில்லையெனில் பொதுவான பரிந்துரைகளைப் பின்பற்றலாம்.

நீர் மேலாண்மை: சேற்று உழவும், உழுது நிலத்தை சமன் செய்தலும், நீரின் தேவையைக் குறைக்கின்றன. இரும்புச் சக்கரக் கலப்பை மூலம் சேற்றுழவு செய்யும்போது நீர் மண்ணினுள் ஊடுருவி வீணாவது 20 சதவீதம் வரை தடுக்கப்படுகிறது.

வயலில் மடக்கி உழப்பட்ட பசுந்தாள் உரம் நல்ல முறையில் மக்குவதற்கு குறைந்தது ஒரு அங்குல நீர் நிறுத்த வேண்டும். குறைவான நார்த்தன்மையுடைய சணப்பை, தக்கைப்பூண்டு போன்றவைகளுக்கு 7 நாளும், அதிகம் நார்த்தன்மையுடைய கொளுஞ்சி இனங்களுக்கு 15 நாளும் நீர் நிறுத்திய பின்னரே நடவேண்டும். நடவு செய்யும்போது தண்ணீரின் அளவு, சேறும் சகதியுமாய் இருத்தல் நல்லது. இவ்வாறு அமைந்தால் சரியான ஆழத்தில் நடவும். அதிக தூர் பிடிப்பதற்கான சந்தர்ப்பமும் கிடைக்கும். நட்ட ஒரு வாரத்துக்கு ஓரங்குல நீர் தேக்கி வைக்கவேண்டும். இது தூர் பச்சை பிடிக்கும் காலமானதால் நீர் அளவு குறையாமல் பராமரிக்க வேண்டும். பச்சை பிடித்த பின்பு 2 அங்குல ஆழத்துக்கு நீர் கட்டி, கட்டிய நீர் மறைந்து நூலளவு மண்வெடிப்பு தோன்றும்போது மீண்டும் நீர் கட்டுதல் வேண்டும். இம்முறையில் நீர் கட்டுதல் பயிர் முதிர்ச்சியடையும்வரை கடைப்பிடிக்கவேண்டும். அறுவடை: நடவு செய்யப்பட்ட ரகத்தின் வயதைப் பொறுத்து அறுவடை காலத்துக்கு 7 நாள்கள் முன்பாக நீர் தேங்கி நிற்காமல் பாரத்துக்கொள்வது நல்லது. 80 சதம் கதிர்மணிகள் முற்றிய பின்பும்கூட வயலில் பச்சை இலைகளின் தோற்றம் காணப்படும். எனவே, கதிர் முதிர்ச்சியடைந்துவிட்டதா என்பதை உறுதிப்படுத்த வேண்டியது அவசியம். பொதுவாக கதிரின் அடிப்பாகத்தில் உள்ள நெல்மணிகளை கை விரல்களால் அழுத்திப்பார்த்து முதிர்ச்சியை முடிவு செய்யலாம். மணிகளை அழுத்தும்போது கடினமாகவும் பால் வெளியில் வராமலும் இருந்தால் அறுவடைக்குத் தயார் என அர்த்தம். அறுவடையை 3 நாள் முன்கூட்டி செய்ய வேண்டியநிலை ஏற்படும்போது. சாப்பாட்டு உப்புக்கரைசல் 20 சதவீதம் என்ற அளவில் இலைகளில் தெளித்து 48 மணி நேரத்துக்குப் பின் அறுவடை செய்யலாம்.

**நீர்ப் பற்றாக்குறையும், மேலாண்மையும்...**

பருவக் காலங்களில் நீண்ட வறண்ட நிலை நிலவும் நேரத்தில் பயிர் வளர்ச்சி, மகசூல் பாதிப்பதைத் தவிர்க்கவும், பாதிக்கப்பட்ட பயிரைப் பாதுகாக்க ஊட்டச்சத்து மேலாண்மை முறையை பின்பற்றலாம் என வேளாண்மைத் துறையின் இணை இயக்குநர் ஆர்.ஜெயசுந்தர் தெரிவித்தார்.

நீர்ப் பற்றாக்குறை ஏற்படும்போது, பயிர்களின் முக்கிய சத்துகளான பொட்டாட்சியம், மக்னீசியம் பற்றாக்குறை அதிகம் காணப்படும். இதுமட்டுமின்றி கரும்பில் துத்தநாகம், போரான் நுண்ணூட்டச் சத்துகளின் பற்றாக்குறையும் ஏற்படும். இந்தக் குறைபாட்டை நீக்க 20 சதவீதம் அம்மோனியம் பாஸ்பேட், 0.5-1 சதவீதம் பொட்டாசியம் குளோரைடு, 0.5 சதவீதம் துத்தநாக சல்பேட், 0.5-1 சதவீதம் இரும்பு சல்பேட் அத்துடன் 1 சதவீதம் யூரியா, 0.3 சதவீதம் போரிக் அமிலம் ஆகியவற்றை பயிர்களுக்கு ஏற்ப தெளிக்க வேண்டும்.

நீராவிப் போக்கைத் தடுக்க..: பயிர்களின் நீராவிப் போக்கைத் தடுக்கப் பயன்படும் பொருள்கள் ஆன்டி-டிரான்ஸ்பிரன்ட்ஸ் எனப்படும் இலைத் துளைகளை மூடுவதால் அதிக அளவு நீராவி வெளியேறுவதைத் தடுக்க முடியும்.

2.4டி, எத்ரல், டிபா, சக்சினிக் அமிலம், அஸ்கார்பிக் அமிலம், சைக்கோசெல் ஆகியன இலைகளை மூடும் தன்மை கொண்டவை. அதேபோல் கயோலின், சீன களிமண், கால்சியம் பை கார்பனேட், சுண்ணாம்பு நீர் ஆகியவையும் நீராவிப் போக்கை தடுக்கும் தன்மை கொண்டவை. போதுமான அளவு மழை பெய்யாதபோது பயிர்களின் மகசூலை அதிகரிக்கவும், கடுமையான வறட்சி நிலவும்போதும், ஒரு நிலையான மகசூலை எடுக்க இந்த முறை உதவுகிறது. தானியங்கள் அளவு பாதிக்கப்படுவதில்லை. விதைகளின் தரம் உயர்கிறது. குறைந்த முதலீட்டில் பயிர்களின் சேதம் தவிர்க்கப்படுகிறது.

வளர்ச்சி ஊக்கிகள்: வறட்சிக் காலத்தில் பயிரின் வளர்ச்சி, மகசூலை

நிலைநிறுத்த வளர்ச்சி ஊக்கிகள் பெரிதும் உதவுகின்றன. வேரின் வளர்ச்சியைத் தூண்டவும், நீராவிப் போக்கை தடுக்கவும் சைக்கோசெல், மெபிகுவாட் குளோரைடு ஆகியவற்றை பயன்படுத்தலாம். இவை இலைகள் முதிர்ச்சியடையும் முன்பே உதிர்வதைத் தடுக்கிறது. தண்டில் சேமித்து வைக்கும் உணவை வளர்ச்சி காலத்தில் பயிரின் வளர்ச்சிக்கு பயன்படுத்திக் கொள்ள சைட்டோகைனின், சாலிசிலிக் அமிலம் பயன்படுத்தலாம். வறட்சிக் காலத்தில் செல் சவ்வுகளின் பாதிப்பைத் தடுக்க அஸ்கார்பிக் அமிலம் உதவுகிறது.

மேலாண்மைத் தொழில்நுட்பங்கள்: 2 சதவீதம் டிஏபி, 1 சதவீதம் பொட்டாசியம் குளோரைடு கரைசலை பூக்கும் பருவம், தானியங்கள் உருவாகும் பருவத்தில் தெளிக்க வேண்டும். 3 சதவீதம் கயோலின் கரைசலை வறட்சி காலங்களில் குறித்த பருவத்தில் தெளிக்க வேண்டும்.

கரும்பு, சோளத்தின் சோகையை நிலப் போர்வையாக பயன்படுத்துவதன் மூலம் நிலத்தின் ஈரப்பதத்தை நிலை நிறுத்தலாம். தழைச் சத்து உரங்களைப் பிரித்து விதைத்த 45, 60 நாள்கள் கழித்து இடலாம். உயிர் உரங்களை பயன்படுத்தலாம். விதைகளைப் கடினப்படுத்தலாம்.

பருத்தியில் 15, 20-ஆவது கணுப் பகுதிக்கு மேலே உள்ள பகுதியை கிள்ளிவிடுவதன் மூலம் நீராவிப்போக்கைத் தவிர்க்கலாம்.

பூசா ஐடரோஜல்: நீர்ப் பற்றாக்குறைக்கு நிவர்த்தியாக பூசா ஐடரோஜலை பயன்படுத்தலாம். இது மண்ணை பக்குவப்படுத்தும். இதை ஏனைய உரங்களைப் போல் மண்ணில் இடும்போது, அதன் எடைக்கு 400 மடங்கு தண்ணீரை உரிஞ்சி பயிர்களின் தேவைக்கேற்ப நீரை வெளியிடும் தன்மை கொண்டது. இது மண்ணில் ஓராண்டு வரை அழியாமல் இருக்கக் கூடியது. நிலக்கடலை, தானியப் பயிர்கள், கரும்பு, பயறுவகைகளுக்கு நிலத்தில் இடுவதற்கு ஏற்றது. இதை ஒரு ஹெக்டேருக்கு 3 கிலோ எனும் அளவில் மண்ணில் இட வேண்டும்.

நீர்ப் பற்றாக்குறையில் இருந்து பயிர்களைக் காப்பாற்ற மெத்தைலோ பாக்டீரியம் நுண்ணுயிர் திரவத்தைப் பயன்படுத்தலாம். மெத்தைலோ பாக்டீரியா இலையின் துவாரத்தில் இருந்து வெளிப்படும் மெத்தனாலை உள்கொள்ளும் தன்மையுடையது. இதை தண்ணீர் கலந்து தெளித்தால் பயிரின் ஈரம் வறண்டு விடாமல் பாதுகாக்கப்படும். 20 நாள்களுக்கு தேவையான ஈரத்தை இது சேமித்து வைக்கும். ஒரு ஏக்கருக்கு 200 மில்லி திரவத்தை 200 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும் என்றார்.

## தமிழகம், புதுச்சேரியில் மழைக்கு வாய்ப்பு

தமிழகம், புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்தில் ஆங்காங்கே இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது.

இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரி கூறியதாவது: வெப்பச் சலனம் காரணமாக தமிழகம், புதுச்சேரியில் பரவலாக மழை பதிவாகி வருகிறது. குறிப்பாக, ஓரிரு மாவட்டங்களில் இடியுடன் கூடிய பலத்த மழை பதிவானது. கடந்த 24 மணி நேரத்தில் கரூரில் 60 மி.மீ, திண்டுக்கல் மாவட்டம் - நிலக்கோட்டையில் 50 மி.மீ, விருதுநகர் மாவட்டம் - சாத்தூரில் 40 மி.மீ, பெரம்பலூர் மாவட்டம்- செட்டிக்குளம், திண்டுக்கல் மாவட்டம்- கொடைக்கானல், விருதுநகர் மாவட்டம் -சிவகாசி, மதுரை மாவட்டம்- உசிலம்பட்டி ஆகிய இடங்களில் 30 மி.மீட்டர் மழை பதிவாகியது.

பலத்த மழைக்கு வாய்ப்பு: புதுச்சேரி, தமிழகத்தின் உள் மாவட்டங்களில் சனிக்கிழமை (செப்.26) பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது. அடுத்த 24 மணி நேரத்தில், தமிழகம், புதுச்சேரியில் ஆங்காங்கே இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னை மாநகரைப் பொருத்தவரை, வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில், நகரின் ஒரு சில பகுதிகளில் இடியுடன் கூடிய மழை

பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**கொடைக்கானலில் 2ஆவது நாளாக பலத்த மழை: மின்சாரம் துண்டிப்பு**

கொடைக்கானலில் 2ஆவது நாளாக வியாழக்கிழமையும் பலத்த மழை பெய்ததால் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

கொடைக்கானலில் புதன்கிழமை மாலையில் காற்றுடன் பலத்த மழை பெய்தது. இதனால் ஆங்காங்கே மரக்கிளைகள் முறிந்து சாலைகளிலும், மின் கம்பிகள் மீதும் விழுந்தன. இதன் காரணமாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது. மின்சாரமும் துண்டிக்கப்பட்டது.

இந்நிலையில் வியாழக்கிழமையும் 2ஆவது நாளாக பலத்த மழை கொட்டியது. இரவு 7 மணிக்கு பெய்யத் தொடங்கிய மழை 9 மணிக்கு மேலும் பெய்து கொண்டிருந்தது. இதனால் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. கொடைக்கானல் நகரமே இருளில் மூழ்கியது.

**நவ.19 முதல் பெங்களூரில் வேளாண் கண்காட்சி**

பெங்களூரு வேளாண் அறிவியல் பல்கலைக்கழகம் சார்பில், பெங்களூரில் நவ.19-ஆம் தேதி முதல் 4 நாள்களுக்கு வேளாண் கண்காட்சி நடத்தப்படுகிறது.

இதுகுறித்து பெங்களூரு வேளாண் அறிவியல் பல்கலைக்கழகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கர்நாடக வேளாண் துறையின் ஒத்துழைப்புடன் பெங்களூரு வேளாண் அறிவியல் பல்கலைக்கழகத்தின் சார்பில், பெங்களூரு, காந்தி வேளாண் மையத்தில் நவ.19 முதல் 22-ஆம் தேதி வரை வேளாண் கண்காட்சி நடத்தப்படுகிறது.

இந்த கண்காட்சியின் அங்கமாக தேசிய இயற்கை வேளாண்மை கண்காட்சி, தேசிய வேளாண் கருவிகள் மற்றும் மீன்வள கண்காட்சி, கிராம சந்தை ஆகியவையும் நடக்கவிருக்கிறது.

கண்காட்சியில் அரசு துறைகள் மற்றும் நிறுவனங்கள், தன்னார்வத் தொண்டு அமைப்புகள், கழகங்கள், தனியார் நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், வாரியங்கள், கூட்டமைப்புகள், நிதி நிறுவனங்கள், வேளாண்சார் நிறுவனங்கள், உற்பத்தியாளர்கள் பங்கேற்று தங்கள் பொருள்களை காட்சிப்படுத்துகின்றனர்.

இதில் அரங்குகள் அமைக்க விரும்பும் நிறுவனங்கள் நவ.5-ஆம் தேதிக்குள் முன்பதிவு செய்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு விரிவாக்க இயக்குநர், பெங்களூரு வேளாண் அறிவியல் பல்கலைக்கழகம், ஹெப்பாள், பெங்களூரு என்ற முகவரியிலோ அல்லது 080-23516353, 23418883, 9844176675, 9902754000 ஆகிய தொலைபேசி எண்களிலோ தொடர்பு கொள்ளலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை: ஆட்சியர் ஆலோசனை

விழுப்புரம் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையின் போது எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுடன் மாவட்ட ஆட்சியர் எம்.லட்சுமி ஆலோசனை நடத்தினார்.

மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் புதன்கிழமை நடைபெற்ற கூட்டத்துக்கு ஆட்சியர் எம்.லட்சுமி தலைமை தாங்கினார்.

கூட்டத்தில் வடகிழக்குப் பருவ மழை வரும் அக்டோபர் மாதத்தில் தொடங்க உள்ளது. இதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை இப்போதே எடுக்க வேண்டும். புயல், மழை, வெள்ளம் ஆகியவற்றால் பாதிப்பு ஏற்படக் கூடிய பகுதிகள் குறித்த விவரம், நிவாரணம் வழங்கப்பட வேண்டிய மையங்கள் மற்றும் வட்டங்களில் அமைந்துள்ள மருத்துவமனை, தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் தொலைபேசி எண்கள் ஆகியவற்றை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

வடகிழக்குப் பருவமழை தொடங்க உள்ளதால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தகவல் தெரிவிக்க மையம் தொடங்கப்பட்டுள்ளது. இங்கு 24 மணி நேரமும் சுழற்சி முறையில் அலுவலர்கள் பணி நியமனம் செய்யப்பட்டு, எஸ்.டி.டி. வசதி, இணையதள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டங்கள் மற்றும் கோட்டங்களில் இதனை செயல்படுத்த வேண்டும்.

வடகிழக்குப் பருவமழை காலங்களில் ஏற்படும் உயிரிழப்பு, கால்நடை இழப்பு, குடிசை வீடுகள் சேதம், சாலைகள், பாலங்கள், ஏரிகள் உடைப்பு ஆகிய பாதிப்புகளை மாவட்ட ஆட்சியரக அலுவலகத்தில் உள்ள வெள்ளக் கட்டுப்பாட்டு அறைக்கு 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசியில் தொடர்பு கொண்டு பொதுமக்கள் தெரிவிக்கலாம்.

மழை, வெள்ளம் பாதிப்பு ஏற்பட்டால் பொதுமக்களை தங்க வைக்க பொதுப்பணித் துறையினர் தகுதியான கட்டடங்களை தேர்வு செய்து வைத்திருக்க வேண்டும். அக் கட்டங்களில் மின்வசதி மற்றும் குடிநீர் வசதி, கழிப்பறை வசதி உள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

பொதுப்பணித் துறை நீர்வள ஆதார அமைப்பு, தேவையான மண் நிரப்பிய பைகள் இருப்பு வைத்திருக்க வேண்டும். நியாயவிலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருள்கள் 30 நாள்களுக்கும் இருப்பு வைத்திருக்க வேண்டும்.

மின்வாரியம் மழை காலங்களில் மின்சார வயர்கள் அறுந்து விழுதல் மற்றும் மின்கசிவின் மூலம் மனித உயிரிழப்பு ஏற்படுவதை தடுக்க தொங்கும் மின்சார வயர்களை உடனடியாக சரி செய்ய வேண்டும். தேவையான மின் பணியாளர்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர்கள் வடகிழக்குப் பருவமழையின்போது ஏற்படும் மனித உயிரிழப்பு, கால்நடை இழப்பு, குடிசை வீடுகள் சேதம் மற்றும் இதர சேதங்கள் குறித்த விவரங்களை

உடனுக்குடன் ஆட்சியருக்கு அறிக்கை அளிக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ராஜசேகரன், கோட்டாட்சியர் செந்தில் ஆறுமுகம், உதவி இயக்குநர்கள் (ஊராட்சிகள்) செங்குட்டுவன், சாம்சங் தினகர்பாபு, மாவட்டக் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அனுசுய டெய்சி எர்னஸ்ட், அனைத்து வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், நகராட்சி ஆணையர்கள் பேரூராட்சி செயல் அலுவலர்கள் உள்பட பலர் பங்கேற்றனர்.

**இயந்திர நெல் நடவு முகாம்**

சின்னசேலம் வட்டத்தைச் சேர்ந்த வடக்கனந்தல் வேளாண்மைத் துறையின் சார்பில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் இயந்திரத்தின் மூலம் நெல் நடவு செய்யும் முகாம் கோமுகி அணை அருகே உள்ள டேம் சாலையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

வேளாண்மை உதவி இயக்குநர் மு.செல்வராஜ் இயந்திர நெல் நடவிற்கு ஏக்கருக்கு ரூ.3 ஆயிரம் மானியம் வழங்கப்படுவதாகவும் விருப்பமுள்ள விவசாயிகள் விவரங்களை அவரவர் பகுதி வேளாண்மை உதவி அலுவலர்களை தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார்.

மேலும் நெல் நடவு இயந்திரம் வாங்கும் விவசாயிகளுக்கு 4 வரிசை நடவு இயந்திரத்துக்கு சிறு, குறு, ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கு மற்றும் பெண் விவசாயிகளுக்கு 50 சதவிகிதம் மானியம் (அ) ரூ.94 ஆயிரமும், இதர விவசாயிகளுக்கு 40 சதவிகித மானியம் (அ) ரூ.75 ஆயிரம் வழங்கப்படுவதாகவும், 4-16 வரிசை நடவு இயந்திரம் வாங்குவதற்கு 40 சதவிகித மானியம் (அ) ரூ.2 லட்சம் வழங்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

வேளாண்மை உதவி பொறியாளர் ச.கணேசன் வேளாண்மை பொறியியல் துறை மூலம் செயல்படுத்தும் வேளாண்மை கருவிகளுக்கான மானிய திட்டங்கள் குறித்து பேசினார்.

வேளாண்மை அலுவலர் வி.விஜயலட்சுமி, துணை வேளாண்மை அலுவலர் ப.பழனிவேல், உதவி வேளாண்மை அலுவலர்கள் இரா.முருகேசன், பெ.துரை, மு.ரஜினிகாந்த், அ.தியாகராஜன், இரா.ஆரோக்கியசாமி, மு.தங்கதுரை உள்ளிட்டோர் விவசாயிகளுடன் திட்டங்களை பற்றி கலந்துரையாடல் மேற்கொண்டார். முகாமில் நெல் நடவு இயந்திர உரிமையாளர்கள் சரவணன், அய்யப்பன் கிலாஸ் நிறுவனத்தினர் கலந்து கொண்டு நெல் வயலில் நாற்றங்கால் அமைப்பது குறித்த செயல் விளக்கம் அளித்தனர்.

முகாமில் அரிமா மாவட்ட முன்னாள் ஆளுநர் வி.டி.இ.திருநாராயணன், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி துணைத் தலைவர் சி.கருப்பன், வடக்கனந்தல் பேரூராட்சித் தலைவர் ம.வெங்கடேசன், துணைத் தலைவர், வெங்கடாசலம், பேரூராட்சி கவுன்சிலர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். இதற்கான ஏற்பாட்டினை பேரூராட்சிக் கவுன்சிலர் முருகப்பிள்ளை செய்திருந்தார்.

**விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்க வலியுறுத்தல்**

அரசு நலத்திட்ட உதவிகள் பெற விவசாயிகளுக்கு வேளாண் அடையாள அட்டை வழங்க வேண்டும் என புதுச்சேரி விவசாயிகள் சங்கம் கோரியுள்ளது.

அச்சங்கத்தின் மாநிலக் குழுக் கூட்டம் வில்லியனூரில் புதன்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு சங்கத் தலைவர் டி.பி.ரவி தலைமை தாங்கினார்.

பொதுச்செயலர் கீதநாதன் சிறப்புரையாற்றினார். மாநிலக் குழுவின் கௌரவத் தலைவர் மாசிலாமணி, துணைப் பொதுச்செயலர் ராஜா, பொருளாளர் கலியமூர்த்தி, செயலர் ராமச்சந்திரன் உள்பட பலர் பங்கேற்றனர்.

கூட்டத்தில் கோயில் நிலம், புறம்போக்கு, குத்தகைதாரர் கூட்டுப்பட்டா ஆகிய பயிர் சாகுபடியாளர்களுக்கு வேளாண் துறை நலத்திட்டங்களைப் பெற உடனே வேளாண் அடையாள அட்டை தர வேண்டும். அரியூரில் உள்ள தனியார் சர்க்கரை ஆலையில் கரும்பு அரவை தொடங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாயிகளுக்கு ஏற்படும் நஷ்டத்தை தடுக்க வேண்டும். நிலுவைத் தொகையை வழங்க வேண்டும். மரவள்ளிக் கிழங்கு சாகுபடி செய்துள்ள விவசாயிகள் விலை கட்டுப்படியாகாமல் பாதிப்பில் உள்ளனர். கடந்த ஆண்டு டன் ஒன்றுக்கு மரவள்ளிக் கிழங்கு ரூ.9 ஆயிரம் வரை கொள்முதல் செய்யப்பட்டது. தற்போது டன் ஒன்றுக்கு ரூ.2 ஆயிரம் மட்டும் கொள்முதல் செய்கின்றனர். இதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். அரசே மரவள்ளிக் கிழங்கை கொள்முதல் செய்ய வேண்டும். புதுச்சேரியில் ஊசுடு, பாகூர் உள்ளிட்ட முக்கிய ஏரிகளை ஆழப்படுத்தி கரைகளை உயர்த்த வேண்டும். காரைக்கால் பகுதிக்கு 7 டி.எம்.சி. காவிரி நீரை பெறும் முயற்சியில் பொதுப்பணித் துறை நீர்பாசனப் பிரிவு கவனம் செலுத்துவதில்லை என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**விவசாயிகள் சங்க செயற்குழுக் கூட்டம்**

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் விருதுநகர் மாவட்ட செயற்குழுக் கூட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது.

விருதுநகர் பாத்திமாநகரில் தனியார் அரங்கத்தில் நடந்த கூட்டத்திற்கு மாநிலத் தலைவர் ஓ.எ.நாராயணசாமி தலைமை வகித்தார். விருதுநகர் மாவட்ட தலைவர் ரெங்குதாஸ், மாநில துணைத் தலைவர்

ஆர்.பாண்டியராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் ஓ.டி.எஸ்.எத்திராஜ் சௌத்ரி, மாநில அமைப்பாளர் பி.எஸ்.காளிராஜ் ஆகியோர் வரவேற்றனர்.

இக்கூட்டத்தில், மாநில பிரசாரகுழு செயலர் வீராச்சாமி, மாநில நிர்வாகக் குழு எம்.ஜி.வரதராஜ், மாவட்டச் செயலாளர் எஸ்.நாராயணசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதில், விவசாய விளைபொருள்களுக்கு உற்பத்திச் செலவுக்கு ஏற்ப விலை நிர்ணயம் செய்ய வேண்டும். விவசாய பருவ காலத்தில் உரம், பூச்சி மருந்து மானியத்தில் வழங்க வேண்டும். அனைத்து கிராமங்களிலும் குளங்களை தூர்வார வேண்டும். விவசாயிகளும், விவசாய கூலி தொழிலாளர்களும் பணி செய்யும் போது இயற்கை சீற்றத்தினால் உயிரிழந்தால் அவர்கள் குடும்பத்துக்கு ரூ.10 லட்சம் இழப்பீடு வழங்குதல், பயிர்க்கடன் வட்டியில்லாமல் வழங்குதல், இலவச பம்ப்செட் இணைப்பிற்கு உடனே இணைப்பு வழங்குதல், விவசாயத்திற்கு கேடு விளைவிக்கும் பாலித்தீன் பைகளை தடை செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## ஸ்ரீவிலி.யில் பலத்த இடி, மின்னலுடன் மழை: ரயில்வே சிக்னல் பழுது

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூரில் வியாழக்கிழமை மாலை பலத்த இடி மின்னலுடன் சற்று நேரம் மழை பெய்தது. இதில் ஸ்ரீவில்லிபுத்தூர் ரயில் நிலைய சிக்னல் பழுதானது. இதனால் சுமார் 1.30 மணி நேரம் ரயில் போக்குவரத்து நிறுத்தப்பட்டது.

இடி தாக்கியதில் ரயில் நிலைய சிக்னல் பழுதானது. இந்நிலையில் செங்கோட்டையிலிருந்து மதுரை செல்லும் பாசஞ்சர் ரயில் ஸ்ரீவில்லிபுத்தூர் ரயில் நிலையத்திற்கு சுமார் 2 கி.மீ. தூரத்திற்கு முன்பு சிக்னலுக்காக வந்து நின்றது. சிக்னல் பழுதானதால் ரயில் புறப்பட்டுவர வர சிக்னல் கிடைக்கவில்லை. பழுது நீக்கிய பின்னர் இரவு 6.45 மணிக்கு

சிக்னல் கிடைத்ததையடுத்து, ரயில் சுமார் சுமார் 1.30 மணி நேரம் தாமதமாக புறப்பட்டு வந்தது. இதனால் பயணிகள் பெரும் அவதிக்குள்ளாகினர்.

**தக்காளி விலை உயர்வு**

பல்லடம் பகுதியில் தக்காளி விலை உயர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

பல்லடம், பொங்கலூர் பகுதியில் தக்காளி சாகுபடி அதிக அளவில் நடைபெறுகிறது. செப்டம்பர் மாத துவக்கத்தில் தக்காளி விலை மிகவும் குறைந்தது. 15 கிலோ கொண்ட ஒரு டிப்பர் ரூ.40-க்கு விற்பனையானது. இதனால் அதிக நஷ்டம் ஏற்பட்டதால், விவசாயிகள் பலர் செடியிலிருந்து தக்காளியை பறிக்காமல் அப்படியே விட்டு விட்டனர். இந்நிலையில், பல்லடம், திருப்பூர் சந்தைக்கு தக்காளி வரத்து குறைவால் தக்காளியின் விலை ஒரு டிப்பர் தக்காளி ரூ.100 ஆக வியாழக்கிழமை உயர்ந்தது.

**கரும்பு விவசாயிகளுக்கு ரூ.5 கோடி கடன் வழங்க அரசு உத்தரவு**

உடுமலையை அடுத்துள்ள அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை விவசாயிகளுக்கு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ரூ.5.25 கோடி கடன் வழங்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

உடுமலையை அடுத்துள்ள கிருஷ்ணாபுரத்தில் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை இயங்கி வருகிறது. உடுமலை, குமரலிங்கம், கணியூர், ஆலைப் பகுதி, பழனி கிழக்கு, மேற்கு, நெய்க்காரபட்டி, பல்லடம் என எட்டுக் கோட்டங்களில் உள்ள பதிவு செய்த சுமார் 1,500 விவசாயிகளிடம் இருந்து ஒப்பந்த அடிப்படையில் கரும்புகள் பெறப்படுகின்றன.

இந்நிலையில் நடப்பாண்டில் கரும்பு பயிரிட கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடன் வசதி செய்து கொடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். இதையொட்டி தமிழக அரசு, கரும்பு விவசாயிகளுக்கென ரூ.5.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அதை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்க முடிவு செய்ததுள்ளது.

இதுகுறித்து கூட்டுறவுச் சங்க உயர் அதிகாரிகள் கூறியது:

அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை கரும்பு விவசாயிகளுக்கு நடப்பாண்டில் கரும்பு பயிரிட சிறப்பு இனமாக ரூ.5.25 கோடி கடன் வழங்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. கோவை மத்திய கூட்டுறவு வங்கி மூலம் உடுமலை, மடத்துக்குளம் வட்டத்தில் உள்ள 8 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் இருந்து இந்தக் கடன்கள் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. கரும்பு விவசாயிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளலாம் என்றனர்.

## கோட்டாட்சியரிடம் விவசாயிகள் மனு

விவசாயிகளுக்கு பயனுள்ள தக்காளி, மிளகாய் நாற்றுக்களை தோட்டக்கலைத் துறையினர் வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து உடுமலை கோட்டாட்சியர் அ.சாதனைக்குறளிடம், தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் அளிக்கப்பட்ட மனு:

தக்காளி, மிளகாய் நாற்றுக்கள் ஒரு ஹெக்டருக்கு ரூ.20 ஆயிரம் மானியத்துடன் தேசிய தோட்டக்கலை இயக்கம் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. சிவம் என்ற ரக தக்காளி நாற்றுக்கள் சேலம் அரசுப் பண்ணையில் இருந்து வர வழைக்கப்பட்டு ஒரு நாற்றுக்கு ரூ.1.50 பைசா என்ற விலையில் முழு மானியத்துடன் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

வீரிய ஒட்டு ரக தக்காளி விதைகள் ரூ.50 பைசாவிற்கு சிறந்த முறையில் பல தனியார் நிறுவனங்கள் வழங்கி வருகின்றன. இதை விவசாயிகள்

நல்ல முறையில் பயிரிட்டு வருகின்றனர். உள்ளூரிலேயே ரூ.50 பைசாவிற்கு சிறந்த தக்காளி விதைகள் கிடைக்கும்போது ஒரு நாற்றுக்கு ரூ.1.50 பைசா என விலை நிர்ணயம் செய்து அதுவும் சேலத்தில் இருந்து வரவழைக்கப்படுவதாகவும் குறிப்பாக ஒரு நாற்றுக்கு ரூ.60 பைசா போக்குவரத்து செலவாகிறது எனவும் தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இதனால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது.

மேலும் இத்திட்டத்தில் முறைகேடு நடக்க அதிக வாய்ப்புகள் உள்ளது. சேலம் பகுதி தட்ப வெப்ப நிலைக்கும், இப்பகுதி தட்ப வெப்ப நிலைக்கும் பல வேறுபாடுகள் உள்ளன. நாற்றுக்கள் உயிர் பிடிப்பது சிரமம். எனவே இந்தத் திட்ட செயல்பாடுகளில் மாற்றம் செய்து தக்காளி, மிளகாய் நாற்றுக்கள் விவசாயிகளுக்கு பயனுள்ள அடிப்படையில் வழங்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தோட்டத் தொழிலை மேம்படுத்த தேவையான உதவிகளை மத்திய அரசு செய்யும்: லலிதா குமாரமங்கலம்**

தோட்டத் தொழிலை மேம்படுத்துவதற்கான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு செய்யும் என தேசிய மகளிர் ஆணையத்தின் தலைவர் லலிதா குமாரமங்கலம் தெரிவித்தார்.

தென்னிந்திய தோட்ட அதிபர்கள் சங்கத்தின் 122-ஆவது மாநாட்டின் நிறைவு விழா வியாழக்கிழமை நடைபெற்றது.

அதில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று கோல்டன் லீப் போட்டியில் வெற்றி பெற்ற உற்பத்தியாளர்களுக்கு தங்க இலை விருதுகளை வழங்கி லலிதா குமாரமங்கலம் பேசியதாவது:

தோட்டத் தொழிலில் 70 சதவீத பெண்கள் பணியாற்றி வருகின்றனர். அவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும். வாசனை திரவியங்கள் இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதை அதிகப்படுத்தி தோட்டத் தொழிலை காப்பாற்ற வேண்டும். தற்போது மாநில அரசுக்கும், மத்திய அரசுக்கும் இடையே சுமூக உறவு உள்ளது.

தோட்டத் தொழில் மேம்பட மத்திய அரசு தேவையான உதவிகளைச் செய்யும். இன்னும் இரண்டு மாதங்களில் வணிகம், வர்த்தகத் துறையிடம் தேயிலைத் தொழில் தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ள அளிக்கப்படும் என்றார்.

**நவீன முறையில் நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி முகாம்**

பாப்பாரப்பட்டி வேளாண்மை அறிவியல் நிலையத்தில், நவீன முறையில் நாட்டுக்கோழி வளர்ப்பு குறித்த பயிற்சி முகாம் புதன்கிழமை நடைபெற்றது.

வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ந.வடிவேல் பயிற்சியைத் தொடக்கி வைத்தார். நவீன கோழி வளர்ப்பு முறை, சூழலுக்கு ஏற்ற கோழி இனங்கள், தீவன மேலாண்மை, கொட்டகை அமைப்பு, தரமான கோழி குஞ்சுகளை உற்பத்தி செய்தல், நோய் மேலாண்மை, சந்தைப்படுத்துதல் குறித்து உதவிப் பேராசிரியர் ரா.தங்கதுரை விளக்கமளித்தார்.

கோழி இறைச்சியை மதிப்பூட்டிய பொருளாக மாற்ற ஏதுவான விழிப்புணர்வு குறித்து உதவிப் பேராசிரியை க.ஜோதிலட்சுமி எடுத்துரைத்தார். பயிற்சியில் பங்கேற்ற 60-க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு நவீன முறையில் நாட்டுக்கோழி வளர்ப்பு குறித்த கையேடுகள் இலவசமாக அளிக்கப்பட்டன.

**வேளாண்மைப் பொறியியல் துறையில் காவலர் பணிக்கு விண்ணப்பம் வரவேற்பு**

சேலம் வேளாண்மைப் பொறியியல் துறையில் காலியாக உள்ள காவலர் பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

சேலம் மாவட்டத்தில் வேளாண்மைப் பொறியியல் துறையில் காலியாக உள்ள 4 காவலர் பணியிடங்கள் தாற்காலிக அடிப்படையில் நேரடியாக நியமனம் செய்யும் வகையில் அரசாணை பெறப்பட்டுள்ளது.

எனவே, தகுதியான ஆண் விண்ணப்பதாரர்கள் வரும் அக்டோபர் 5 ஆம் தேதிக்குள் சொந்த கையெழுத்தில் அலுவலக வேலை நாள்களில் நேரடியாகவோ அல்லது அஞ்சல் மூலமாகவோ ஆதிதிராவிடர்,

அருந்ததியர், மிகவும் பிற்பட்ட வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினர் (முஸ்லிம் அல்லாதவர்) மற்றும் இதர வகுப்பினரிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பம் செய்வோர் குறைந்தபட்ச கல்வித் தகுதியாக 8ஆம் வகுப்பு தோல்வி அடைந்து, நல்ல உடல்தகுதி பெற்றிருக்க வேண்டும். தமிழ் நன்கு எழுத படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். சைக்கிள் ஓட்ட தெரிந்திருக்க வேண்டும்.

ஆதிதிராவிடர், அருந்ததியர் வகுப்பினர் அதிகபட்ச வயது 2015, ஜனவரி 1 ஆம் தேதி அன்று 35 வயதுக்குள் இருக்க வேண்டும். மிகவும் பிற்பட்ட வகுப்பினர் 32 வயதுக்குள்ளும், இதர வகுப்பினர் 30 வயதுக்குள்ளும் இருக்க வேண்டும். அனைத்து இனத்தவருக்கும் குறைந்தபட்ச வயது 18 ஆக இருக்க வேண்டும். சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பங்களை செயற்பொறியாளர், வேளாண்மைப் பெறியியல் துறை, குமாரசாமிப்பட்டி, சேலம் - 636 007 என்ற முகவரியில் சமர்ப்பிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 8,371 கன அடியாக அதிகரிப்பு

கர்நாடக அணைகளில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 8,371 கன அடியாக அதிகரித்துள்ளது.

கர்நாடக மாநிலத்தின் காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை பெய்து வருவதால் கிருஷ்ணராஜசாகர், கபினி அணைகளில் இருந்து சுமார் 9 ஆயிரம் கன அடி நீர் காவிரி ஆற்றில் திறந்து விடப்பட்டுள்ளது.

இதனால், ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. புதன்கிழமை காலை நிலவரப்படி நொடிக்கு 12,100 கன அடி வீதம்

தண்ணீர் வந்து கொண்டிருந்தது. ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளதால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து ஒரே நாளில் 2 ஆயிரம் கன அடி அதிகரித்தது. இதனால், செவ்வாய்க்கிழமை நொடிக்கு 6,197 கன அடியாக இருந்த நீர்வரத்து, புதன்கிழமை காலை நொடிக்கு 8,371 கன அடியாக அதிகரித்தது. மேட்டூர் அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனம், கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்துக்கு நொடிக்கு 13,800 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. தற்போது, அணையின் நீர்மட்டம் 67.58 அடியாகவும், நீர் இருப்பு 30.65 டி.எம்.சி.யாகவும் உள்ளது.

மேட்டூர் அணையின் நீர்மட்டம் 67 அடியாகக் குறைந்துள்ள நிலையில் அணையில் மூழ்கியிருந்த நந்தி சிலை, கிறிஸ்தவ ஆலயக் கோபுரம் ஆகியவை வெளியே தெரிகின்றன.

**ஆலங்குளத்தில் மழை: பொதுமக்கள் மகிழ்ச்சி**

ஆலங்குளத்தில் வியாழக்கிழமை பிற்பகலில் பெய்த மழையால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

ஆலங்குளத்தில் கடந்த சில நாள்களாக கடும் வெயில் வாட்டி வதைத்தது. ஏப்ரல், மே மாதங்களைப்போல் வெப்பம் அதிகரித்து வந்த நிலையில் அவ்வப்போது ஏற்பட்ட மின்தடையும் பொதுமக்களை புழுக்கத்தால் அவதிப்பட வைத்தது.

இந்நிலையில் வியாழக்கிழமை காலையிலும் கடும் வெயில் அடித்த நிலையில் பிற்பகலில் அரை மணி நேரத்திற்கும் மேலாகப் பெய்த மழை வெப்பத்தை தணித்தது. குளிர்ச்சியான சூழல் நிலவியதால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

**புரட்டாசி மாதம் தொடங்கியதை தொடர்ந்து கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறிகள் விலை ‘கிடு கிடு’ உயர்வு வரத்து அதிகரிப்பால் வெங்காயம் விலை சற்று குறைந்தது**



சென்னை

புரட்டாசி மாதம் தொடங்கியதை தொடர்ந்து கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறிகள் விலை ‘கிடுகிடு’வென உயர்ந்துள்ளது. அதேவேளையில் விளைச்சல்-வரத்து அதிகரிப்பால் வெங்காயம் விலை சற்று குறைந்து உள்ளது.

புரட்டாசி மாதம் தொடங்கியதுகோயம்பேடு மார்க்கெட்டில் கடந்த மாதம் முழுவதும் காய்கறிகள் விலையில் வீழ்ச்சி நீடித்து வந்தது.

கடந்த 18-ந்தேதி புரட்டாசி மாதம் தொடங்கியது. பொதுவாக புரட்டாசி மாதத்தில் பெரும்பாலானவர்கள் அசைவ உணவுகளை தவிர்த்து விடுவார்கள். மேலும், இந்த மாதத்தில் விரதம் இருந்து கடவுள் வழிபாடு செய்வதாலும், தற்போது அசைவ பிரியர்களின் கவனமும் காய்கறிகளின் மீது திரும்பி உள்ளது. இதனால் காய்கறிகள் மீதான தேவை மிகவும்

அதிகரித்து காய்கறிகள் விலை ‘கிடு கிடு’வென உயர்ந்து வருகிறது. இதுகுறித்து சென்னை கோயம்பேடு காய்கறி வியாபாரிகள் சங்க செயலாளர் அப்துல் காதர் கூறியதாவது:-காய்கறிகள் விலை அதிகரிப்பு புரட்டாசி மாதம் தொடங்கி விட்டதால் பெரும்பாலானோர் இந்த மாதத்தில் அசைவ உணவுகளை தவிர்ப்பார்கள். இதனால் காய்கறிகள் மீதான தேவை அதிகரித்து வருகிறது. இதன் காரணமாக காய்கறிகள் விலை உயர்ந்து வருகிறது. இதனால் கூடுதல் லாரிகள் மூலம் காய்கறிகளை இறக்குமதி செய்ய திட்டமிட்டு வருகிறோம். இந்த மாதம் தொடக்கத்தில் இருந்து கூடுதலாக 20 லாரிகளில் காய்கறிகள் கொண்டு வரப்படுகின்றன. காய்கறிகள் தேவையை கருத்தில் கொண்டு 50 லாரிகள் வரை தினமும் சரக்கை அதிகரிக்க முடிவு செய்துள்ளோம்.

கடந்த வாரம் கிலோ ரூ.25-க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த முருங்கைக்காய் தற்போது ரூ.40 முதல் ரூ.50-க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. ரூ.25-க்கு விற்பனை செய்யப்பட்ட பாகற்காய் ரூ.30-க்கும், ரூ.10-க்கு விற்பனை செய்யப்பட்ட தக்காளி ரூ.15-க்கும், ரூ.15-க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த கோவைக்காய் ரூ.20-க்கும், ரூ.12-க்கு விற்பனை செய்யப்பட்ட வெண்டைக்காய் ரூ.20-க்கும், ரூ.20-க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த சவ்சவ் ரூ.25-க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மேலும், புடலங்காய், பீர்க்கங்காய், காலிபிளவர், சேனைக்கிழங்கு உள்ளிட்ட காய்கறிகள் விலை ரூ.5 வரை அதிகரித்து இருக்கிறது. 20 சதவீதம் வரை...அதேவேளையில் வெங்காயம் விலையில் சரிவு ஏற்பட்டு வருகிறது. கடந்த மாதம் இறுதி வரை பெரிய வெங்காயம் விலை கிலோவுக்கு ரூ.80 வரை விற்பனை செய்யப்பட்டது. முகூர்த்த நாளையொட்டி பல்லாரி வெங்காயம் (நாசிக்) மற்றும் ஆந்திரா வெங்காயத்தின் விலையும் அதிகரித்து இருந்தது. விளைச்சல் மற்றும் வரத்து அதிகரிப்பு காரணமாக வெங்காயம் விலை

குறைந்து வருகிறது. கடந்த வாரம் ரூ.60 வரை விற்பனை செய்யப்பட்ட பெரிய வெங்காயம், விலை சரிந்து மீண்டும் ரூ.40 முதல் ரூ.50 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அடுத்தடுத்த நாட்களில் வெங்காயம் விலையில் சரிவு மட்டுமே இருக்கும். அதாவது 20 சதவீதம் வரையில் வெங்காயம் விலை சரியும் என்று கருதுகிறோம்.சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் நேற்று விற்பனை செய்யப்பட்ட காய்கறிகள் விலை நிலவரம் (ஒரு கிலோ) வருமாறு:-

விலை நிலவரம்

உருளைக்கிழங்கு - ரூ.18, மராட்டிய பல்லாரி வெங்காயம் - ரூ.50 முதல் ரூ.60 வரை, ஆந்திரா பல்லாரி வெங்காயம் - ரூ.30 முதல் ரூ.40 வரை, பீன்ஸ் - ரூ.45, கேரட் - ரூ.40, நூக்கல் - ரூ.25, சவ்சவ் - ரூ.25, முட்டைக்கோஸ் - ரூ.15, மிளகாய் - ரூ.20, சேப்பக்கிழங்கு - ரூ.25, சேனைக்கிழங்கு - ரூ.20 முதல் ரூ.22 வரை, கத்தரிக்காய் - ரூ.25, வெண்டைக்காய் - ரூ.20, அவரைக்காய் - ரூ.50, கோவைக்காய் - ரூ.20, கொத்தவரங்காய் - ரூ.25, பாகற்காய் - ரூ.30, முருங்கைக்காய் - ரூ.40 முதல் ரூ.50 வரை, பச்சைப்பட்டாணி - ரூ.60 முதல் 70 வரை, தக்காளி - ரூ.15, சாம்பார் வெங்காயம் - ரூ.40 முதல் ரூ.45 வரை, காலிபிளவர் - ரூ.30, புடலங்காய் - ரூ.25, சுரைக்காய் - ரூ.18, பீர்க்கங்காய் - ரூ.30, தேங்காய் - ரூ.20 முதல் ரூ.22 வரை, வாழைக்காய் (காய் ஒன்று) - ரூ.4.

இவ்வாறு அவர் கூறினார்.

## இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில் நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திகள் சட்டசபையில் ஜெயலலிதா அறிவிப்பு



சென்னை,

இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில் நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திகள் அறிமுகப்படுத்தப்படும் என்று சட்டசபையில் முதல்–அமைச்சர் ஜெயலலிதா அறிவித்தார்.

சட்டசபையில் முதல்–அமைச்சர் ஜெயலலிதா 110–வது விதியின் கீழ் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

<u>மீன் இறங்கு தளங்கள்</u>

* படகுகள் பாதுகாப்பாக நிறுத்தப்படுவதற்கான மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு தளங்கள் அமைக்கவும், பிடித்து வரப்பட்ட கடல் உணவுகளை பதப்படுத்தும் வசதிகளை உருவாக்கவும் நடப்பு நிதியாண்டில், தமிழகத்தில் கடலூர் மாவட்டத்தில் பேட்டோடை, தூத்துக்குடி மாவட்டத்தில் சிங்கித்துறை மற்றும் பழைய காயல், நாகப்பட்டினம் மாவட்டத்தில் சாமந்தான்பேட்டை மற்றும் திருமுல்லை வாசல் ஆகிய 5 இடங்களில் மீன் இறங்கு தளங்கள் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

இதனால் 465 மீன்பிடி படகுகள் பாதுகாப்பாக நிறுத்துவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டு சுமார் 8,400 மீனவர்கள் பயனடைவர்.

இவ்வாறு ஜெயலலிதா கூறினார்.

நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திகள்

110–வது விதியின் கீழ் மேலும் ஒரு அறிவிப்பை வெளியிட்டு அவர் பேசியதாவது:–

* தமிழக கால்நடைகளின் வளத்தையும், நலத்தையும் மேம்படுத்த, கால்நடைகளுக்கு தேவையான தடுப்பூசி மற்றும் நோய் கண்டறிய பயன்படும் ஆய்வகப் பெட்டிகளின் தரமறிய; கால்நடை உயிரியல் பாதுகாப்பு சோதனைச் சாலை மற்றும் சிறப்பு ஆராய்ச்சி மையம் என்ற உலகத் தரமிக்க சிறப்பு ஆராய்ச்சி மையம், 12 கோடியே 75 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

சென்னை மாதவரத்தில் உள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக வளாகத்தில், இது அமைக்கப்படும். மேலும், இதுவரை பறவைக்காய்ச்சல் மற்றும் கோமாரி நோயினை கண்டறிவதற்கு வட மாநிலங்களில் உள்ள ஆய்வுச்சாலைகளையே பயன்படுத்த வேண்டிய நிலை இருந்தது. தற்போது இந்த மையம் நிறுவப்படுவதால், மேற்கண்ட நோய்களை இவ்வாய்வகத்திலேயே கண்டறிய வசதி ஏற்படும். இதன் மூலம், விவசாயிகள் மற்றும் கோழி வளர்ப்போர் மிகுந்த பயன்பெறுவர்.

* அவசர, அவசிய மருத்துவ வசதிக்காக கால்நடைகளை அழைத்து வர இயலாத அளவுக்கு தொலைதூர கிராம பகுதிகளில் வசித்து வரும் விவசாயிகளின் கால்நடைகளுக்கு அவசர சிகிச்சை அளிக்கும் பொருட்டு, இந்தியாவிலேயே முதன்முறையாக 10 ‘‘நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திகள்’’ தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தால் 6 கோடியே 34 லட்சம் ரூபாய் செலவில் வாங்கப்படும். இவ்வாறு ஜெயலலிதா கூறினார்.

## கொடைக்கானலில் ஒரு மணிநேரம் கொட்டித்தீர்த்த மழை நீர்வீழ்ச்சிகளில் வெள்ளப்பெருக்கு



கொடைக்கானல்,

கொடைக்கானலில், நேற்று ஒரு மணிநேரம் கொட்டித்தீர்த்த மழை காரணமாக நீர்விழ்ச்சிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

திடீர் மழை

மலைகளின் இளவரசியான கொடைக்கானலில் கடந்த 10 நாட்களுக்கு முன்பு வரை அவ்வப்போது மழை பெய்தது. இதனால் அங்கு வந்த சுற்றுலா பயணிகள் கொட்டும் மழையில் நனைந்தபடியே சுற்றுலா தலங்களை பார்வையிட்டு ரசித்தனர். அதன் பிறகு மழை குறைய தொடங்கியது.

இந்த நிலையில் நேற்று காலை முதலே வானில் மேக கூட்டங்களாக காட்சியளித்தன. அதைத்தொடர்ந்து குளிர்ந்த காற்றும் வீசத்தொடங்கியது. பகல் 2.45 மணியளவில் திடீரென இடி, மின்னலுடன் மழை பெய்ய தொடங்கியது. பகல் 3.45 மணி வரை நீடித்த மழை காரணமாக நகர் முழுவதும் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது.

நீர்வீழ்ச்சி பகுதியில் வெள்ளப்பெருக்கு

இதனால் வெள்ளி நீர்வீழ்ச்சி உள்ளிட்ட நீர்வீழ்ச்சி பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. பலத்த மழை காரணமாக நகர் முழுவதும் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. மலைச்சாலைகளில் மேக மூட்டமாக காட்சியளித்ததால் வாகனங்கள் தொடர்ந்து செல்வதில் சிக்கல் ஏற்பட்டது.

பின்னர் முகப்பு விளக்கை எரியவிட்டபடியே வாகனங்கள் அனைத்தும் ஒன்றன் பின்பு ஒன்றாக செல்லத்தொடங்கின. மழை நின்ற பின்பும் குளிர்காற்று அதிக அளவில் வீசியதால் சுற்றுலா பயணிகள் விடுதி அறைகளிலேயே முடங்கினர்.

தாண்டிக்குடியிலும்...

கொடைக்கானலை தொடர்ந்து பெரும்பாறை, தாண்டிக்குடி பகுதியிலும் நேற்று மாலை 4.30 மணி முதல் மழை பெய்தது. சுமார் ஒரு மணிநேரம் பெய்த பலத்த மழை காரணமாக இப்பகுதிகளில் மழைநீர் வெள்ளம்போல் ஓடியது. இந்த மழையால் காப்பி உற்பத்தி அதிகரிக்கும் என்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## ஈரோடு-கோபியில் இடி-மின்னலுடன் பலத்த மழை



ஈரோடு மற்றும் கோபியில் இடி-மின்னலுடன் பலத்த மழைபெய்தது.

ஈரோடு

ஈரோட்டில் கடந்த சில நாட்களாக வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. இதனால் பொதுமக்கள் மழை வராதா? என்று ஆவலுடன் எதிர்பார்த்தனர். நேற்று பகலிலும் வெயில் கொளுத்தியது. இந்தநிலையில் மாலையில் வானில் கருமேகங்கள் திரண்டன. அதைத்தொடர்ந்து 6.40 மணிக்கு சாரல் மழை பெய்யத்தொடங்கியது. இந்த மழை இரவு 7.10 மணி வரை பெய்தது. இதனைத்தொடர்ந்தும் மழைதூறிக்கொண்டே இருந்தது. இந்த மழையால் நேற்று இரவில் குளிர்ந்த காற்று வீசியது.

கோபி

கோபி பகுதியில் நேற்று மாலை 5.15 மணிக்கு வானில் மேகங்கள் திரண்டன. பின்னர் குளிர்ந்த காற்று வீசியது. இதனைத்தொடர்ந்து 6.25 மணிக்கு இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்தது. இந்த மழை 6.50 மணி வரை நீடித்தது. இதையடுத்து இரவு 7 மணிக்கு மீண்டும் தொடங்கிய மழை 7.10 மணி வரை பெய்தது. இந்த மழையால் கோபி பகுதியில் உள்ள ரோடுகளில் வெள்ளம் போல் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது.

கொடுமுடி

கொடுமுடியில் நேற்று இரவு 7.30 மணிக்கு மழைபெய்ய ஆரம்பித்தது. 8.30 மணிவரை பலத்த மழை கொட்டியது. இதனைத்தொடர்ந்தும் மழைதூறிக்கொண்டே இருந்தது. இந்த மழையால் நகரின் தாழ்வான இடங்களில் மழைநீர் தேங்கிநின்றது. சாலைகள் மற்றும் தெருக்களில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. சாலைப்புதூர், வருந்தியாபாளையம், சோளங்காபாளையம் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் நேற்று இரவு பலத்த மழை பெய்தது.

தினகரன்

**மேட்டூர் அணைக்கு நீர்வரத்து உயர்வு**



மேட்டூர்: கர்நாடக அணைகளில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 8789 கனஅடியாக உயர்ந்துள்ளது.

கர்நாடக மாநிலத்தின் கபினி, கிருஷ்ணராஜசாகர் அணைகளில் இருந்து வினாடிக்கு தலா 4 ஆயிரம் கனஅடிவீதம் தண்ணீர், தமிழகத்திற்கு திறந்து விடப்பட்டுள்ளது. இதனால் ஒகேனக்கல் காவிரியாற்றில் நேற்று காலை 12,200 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் 8,371 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று 8781 கனஅடியாக உயர்ந்தது. அணையில் இருந்து டெல்டா மற்றும் கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்திற்காக வினாடிக்கு 13,800 கனஅடி நீர் திறக்கப்படுகிறது. அணையின் நீர் மட்டம் 67.04 அடி, நீர் இருப்பு 30.21 டிஎம்சி.

**நெல் கொள்முதல் நிலையங்களில் விதிக்கப்படும் கட்டுப்பாடுகளால் தனியாரிடம் நெல்லை கடனுக்கு விற்பனை செய்யும் விவசாயிகள்**




[redacted]

திருவாரூர்: திருவாரூர் மாவட்டத்தில் அரசு நெல் கொள்முதல் நிலையங்களில் விதிக்கப்படும் கட்டுப்பாடுகளால் விளைவித்த நெல்லை தனியாரிடம் கடனுக்கு விற்பனை செய்யும் நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். போதிய தண்ணீர் இன்றி திருவாரூர் மாவட்டத்தில் நடப்பாண்டில் நெல்லை சாகுபடி 13 ஹெக்டரில் இருந்து 4,500 ஹெக்டராக குறைந்தது. இந்நிலையில் உற்பத்தி செய்த நெல்லை கொள்முதல் செய்ய 17% மட்டுமே ஈரப்பதம் இருக்கும் என அரசு கட்டுப்பாடு விதித்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

அறுவடை நெல்லை உலர வைத்து மூடி வைத்து பிரித்தால் மீண்டும் ஈரப்பதம் அதிகரிப்பதாகும். அடிக்கடி மின்வெட்டு ஏற்படுவதால் உரிய நேரத்தில் நெல்லை தூற்ற முடிவதில்லை என்றும் அவர்கள் புகார் கூறியுள்ளனர். இவற்றை கருத்தில் கொள்ளாமல் கட்டுப்பாடுகளை விதிப்படுதால் நெல்லை தனியாரிடம் கடனுக்கு விற்பதாக விவசாயிகள் கவலைப்படுகின்றனர். திருவாரூர் மாவட்டத்தில் 52 அரசு நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. இதில் நீடதமங்கலம், செட்டிசத்திரம், எடமேலியூர் உள்ளிட்ட இடங்களில் கட்டுப்பாடுகள் காரணமாக ஏராளமான நெல் மூட்டைகள் கொள்முதல் செய்யப்படாமல்

தேங்கிக் கடப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர். எனவே நிபந்தனைகளை தளர்த்தி தங்களின் வாழ்வாதாரத்தை காப்பாற்ற அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**கருகும் சம்பா பயிரை காப்பாற்ற கர்நாடக முதல்வரை சந்திக்க வேண்டும் : ஜெயலலிதாவுக்கு காவிரி உரிமை மீட்பு குழு கோரிக்கை**




வேதாரண்யம்: நாகை மாவட்டம் வேதாரண்யம் தாலுகா தாணிக்கோட்டகத்தில் காவிரி உரிமை மீட்புக்குழு பிரசார கூட்டம் நடைபெற்றது. வருகிற 28ம்தேதி காவிரி மேலாண்மை குழு அமைக்க வலியுறுத்தி நாகை மாவட்டம் பனங்குடியில் ஓ.என்.ஜி.சி அலுவலகத்தை முற்றுகையிடும் போராட்டம் நடைபெறுகிறது. இதற்கு ஆதரவு திரட்டுவதற்காக இக்கூட்டம் நடைபெற்றது. இதில் காவிரி உரிமை மீட்பு குழு மாநில ஒருங்கிணைப்பாளர் மணியரசன் பேசினார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

காவிரியில் தண்ணீர் விட நடவடிக்கை எடுக்காத மத்திய அரசு, காவிரிப் படுகையில் எண்ணெய் வளங்களை எடுக்கக்கூடாது, காவிரி மேலாண்மை குழு அமைக்க வேண்டும் என வலியுறுத்தி வருகிற 28ம்தேதி பனங்குடியில் மிகப்பெரிய முற்றுகை போராட்டம்

நடைபெறுகிறது. இதில் ஆயிரக்கணக்கான விவசாயிகள் பங்கேற்க உள்ளனர். தமிழகத்தில் ஒருபோக சம்பா சாகுபடி 16 லட்சம் ஹெக்டேரில் நடைபெறுகிறது. தற்போது தண்ணீர் வராததால் முளைத்த பயிர்கள் கருக தொடங்கி விட்டன. எனவே கடந்த காலத்தில் முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். செய்ததுபோல தற்போதைய முதல்வர் ஜெயலலிதா, கர்நாடகம் சென்று அம்மாநில முதல்வரை சந்தித்து காவிரியில் தண்ணீர் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

**மக்காச்சோளம், தேங்காய் விலையில் மாற்றம் இல்லை**

கோவை, : கோவை, திருப்பூர் மாவட்டத்தில் மக்காச்சோளம் மற்றும் தேங்காய் விலை கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக ஒரே நிலையாக உள்ளது. கோவை, திருப்பூர் மாவட்ட ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் விற்பனையான விவசாயிகளின் விளைபொருள்களின் நேற்றைய விலை விபரம் : மஞ்சள் ஒரு குவின்டால் கோவையில் தனி விரலி ரூ.7,156 முதல், ரூ.7,709 வரை, தனி கிழங்கு ரூ.6,400 முதல் ரூ.6,751 வரை, தேங்காய் (100 காய்க்கு) உடுமலையில் ரூ.1,250 முதல் ரூ.2,250 வரை, பொங்கலூரில் ரூ.1,350 முதல் ரூ.1,500 வரை, காரமடையில் ரூ.1,800 முதல் ரூ.1,900 வரை, பொள்ளாச்சியில் ரூ.900 முதல் ரூ.1,340 வரை, அவிநாசியில் ரூ.950 முதல் ரூ.1,150 வரை, மக்காச்சோளம் குவின்டால் உடுமலையில் ரூ.1,500 முதல் ரூ.1,550 வரை, கொண்டைக்கடலை குவின்டால் உடுமலையில் ரூ.4,800 முதல் ரூ.5,200 வரை, கம்பு குவின்டால் காரமடையில் ரூ.1,300 முதல் ரூ.1,350 வரை, நிலக்கடலை குவின்டால் சேவூரில் ரூ.5,400 முதல் ரூ.6,210 வரை விற்பனையானது.

இதில் மக்காச்சோளம் மற்றும் தேங்காய் விலை கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக ஒரே நிலையாக உள்ளது.

**பட்டு நூல் விலை உயர்ந்தும் பட்டுக்கூடு விலை உயரவில்லை**

கோவை, : பட்டு நூல் விலை நேற்று உயர்ந்த நிலையில், அதற்கேற்ப பட்டுக்கூடு கொள்முதல் விலை உயராததால் விவசாயிகள் ஏமாற்றமடைந்தனர். கோவை பட்டு வளர்ச்சித்துறை அலுவலகத்தில் பட்டுக்கூடு விற்பனை மையம் உள்ளது. இங்கு தினசரி பட்டுக்கூடுகள் விற்பனை செய்யப்படுகிறது. கோவை, திருப்பூர் மாவட்ட விவசாயிகள் பட்டுக்கூடுகளை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். வியாபாரிகள் மற்றும் பட்டு ஜவுளி கூட்டுறவு சங்கத்தினர் கொள்முதல் செய்கின்றனர். இங்கு நேற்றைய விற்பனைக்கு 475 கிலோ பட்டுக்கூடுகள் வந்தது. அன்றாடம் பட்டுக்கூடுகளை விற்பனை செய்ய, சராசரி விலை நிர்ணயிக்கப்படுகிறது. இது அன்றாடம் நிலவும் பட்டு நூல் விலைக்கேற்ப நிர்ணயிக்கப்படுகிறது. நேற்றைய பட்டு நூல் கிலோ ரூ.2,205 ஆக இருந்தது. இது கடந்த ஒரு வாரமாக நிலவிய விலையை விட கிலோவிற்கு ரூ.29 அதிகமாகும். அதற்கேற்ப பட்டுக்கூடுகளுக்கான சராசரி விலை நிர்ணயித்து ஏலம் கேட்க அனுமதிக்கப்பட்டனர். ஆனால், பட்டுக்கூடுகள் விலை கிலோ குறைந்தபட்சம் ரூ.227 ஆகவும், அதிகபட்சம் ரூ.311 ஆகவும், சராசரி விலையாக ரூ.268 ஆகவும் இருந்தது. இது பட்டு நூல் விலை உயர்விற்கேற்ப உயராமல், விலை குறைந்துள்ளதால் விவசாயிகள் ஏமாற்றமடைந்தனர். இது குறித்து விவசாயிகள் கூறுகையில், கடந்த மாதம் 24ம் தேதி பட்டு நூல் விலை கிலோ ரூ.2079 ஆக இருந்தபோது பட்டுக்கூடுகளின் சராசரி விலை ரூ.286 ஆக இருந்தது. ஒரு மாதத்தில் பட்டு நூல் விலை கிலோவிற்கு ரூ.126 உயர்ந்துள்ள நிலையில், பட்டுக்கூடுகளின் விலை மட்டும் உயராமல் உள்ளது' என்றனர்.

இது குறித்து பட்டுக்கூடு விற்பனை மைய அதிகாரிகள் கூறுகையில், தரமான பட்டுக்கூடுகளுக்கு நல்ல விலை கிடைக்கும். பட்டு நூல் விலைக்கேற்ப சராசரி விலை உயர்த்தப்பட்டாலும் பட்டுக்கூடுகளின்

தரக்குறைபாட்டால் விலை கிடைக்கவில்லை. தரமான பட்டுக்கூடுகளை உற்பத்தி செய்ய விவசாயிகள் கவனம் செலுத்த வேண்டும்’ என்றனர்.

## 2015ல் சாதனை புரிந்த தொழில் முனைவோர்களுக்கு 25ல் விருது வழங்கும் விழா

கோவை, : 2015ம் ஆண்டில் சாதனை புரிந்த கோவை, திருப்பூர், ஈரோட்டை சேர்ந்த தொழில் முனைவோர், முன்னேறிக்கொண்டிருக்கும் தொழில் முனைவோர், மகளிர் தொழில் முனைவோர் ஆகிேயாருக்கு வரும் 25ம் தேதி கோவையில் நடைபெறும் விழாவில் விருதுகள் வழங்கப்படுகிறது. தொழில்முனைவோர் அமைப்பு கோவை பிரிவு தலைவர் ராஜேஸ் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது: ‘எண்டர்பிரனர்ஸ் ஆர்கனைசேஷன்’ சர்வதேச அளவிலான அமைப்பு. அமெரிக்காவை தலைமையிடமாக கொண்டு, 48 நாடுகளில் 150 உள்ளூர் பிரிவு அமைப்புகளாக, 11 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலதிபர்களை கொண்டு செயல்படுகிறது. ஒவ்வொரு பகுதியிலும் தனது உறுப்பினர்களான தொழில் முனைவோர்களை சர்வதேச அளவிலான தொழில் நேர்மை, அறிவுத்தேடல், சவால்களை வெல்லுதல், சாதனை நிகழ்த்துதல் ஆகிய குறிக்கோள்களை நோக்கி செல்ல ஊக்குவிக்கிறது. சர்வதேச அளவில் வணிக முன்னேற்றத்திற்கான நோக்கில் விருதுகளை ஆண்டுதோறும் வழங்கி வருகிறது. இதில் ‘குளோபல் ஸ்டூடண்ட் எண்டர்பிரனர்ஸ் அவார்ட்ஸ்’ முக்கிய விருதாகும். ேமலும் ‘எண்டர்பிரனர் ஆப் த இயர்’ எனும் விருதுகளை ஆண்டுதோறும் வழங்கி வருகிறது. இந்நிலையில் தெற்காசியாவின் 14வது உள்ளூர் பிரிவு அமைப்பாக உள்ள கோவை, திருப்பூர், ஈரோட்டில் 40 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களின் நிறுவனங்களில் 23 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர். இந்நிறுவனங்களின் உற்பத்தி மூலம் 75

பில்லியன் டாலர் மதிப்பிலான விற்பனை நடக்கிறது. இந்நிறுவன தொழில்முனைவோர்களின் சராசரி வயது 37 ஆகும். இந்நிலையில், கோவை, திருப்பூர், ஈரோடு பகுதியில் 2015ம் ஆண்டில் சாதனை புரிந்த தொழில் முனைவோர், முன்னேறிக்கொண்டிருக்கும் தொழில் முனைவோர், மகளிர் தொழில் முனைவோர் என்று 3 பேருக்கு விருதுகள் வழங்கப்படுகிறது. இதற்காக 100க்கு மேற்பட்ட தொழில் முனைவோர்களை ஆய்வுக்குட்படுத்தி 3 பேரை தேர்வு செய்துள்ளோம். இவர்களுக்கான விருது வழங்கும் விழா வரும் 25ம் தேதி மாலை கோவையில் ஓட்டல் தாஜ் விவாண்டாவில் நடக்கிறது. டிவிஎஸ் கேபிடல் தலைவர் கோபால் சீனிவாசன் தலைமை வகிக்கிறார்.

**தமிழகம், புதுச்சேரியில் மழைக்கு வாய்ப்பு**

சென்னை, தமிழகம், புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்தில் ஆங்காங்கே மழை பெய்ய வாய்ப்புள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரி ஒருவர் கூறியதாவது:

வெப்பசலனம் காரணமாக, தமிழகம், புதுச்சேரியில் பரவலாக மழை பதிவாகி வருகிறது. குறிப்பாக, ஓரிரு மாவட்டங்களில் இடியுடன் கூடிய பலத்த மழை பதிவாகியது.கடந்த 24 மணி நேரத்தில் தமிழகம், புதுச்சேரியில் எந்தவொரு மாவட்டத்திலும் மழை பதிவாகவில்லை.பலத்த மழைக்கு வாய்ப்பு:வட கடலோர தமிழகத்தில் தென்மேற்குப் பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. இதன் காரணமாக, வியாழக்கிழமை (செப்.24), வெள்ளிக்கிழமை (செப்.25) பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது.அதாவது

வேலூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல், நீலகிரி, திருப்பூர், கோவை, ஈரோடு, கரூர், திருச்சி, அரியலூர், பெரம்பலூர், சிவகங்கை, விருதுநகர், தேனி, திண்டுக்கல், மதுரை ஆகிய தமிழகத்தின் உள் மாவட்டங்களில் பலத்த மழை பெய்யும்.சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், தஞ்சை, திருவாரூர், நாகை, புதுக்கோட்டை, ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய தமிழகத்தின் கடலோர மாவட்டங்களிலும், புதுச்சேரியிலும் ஆங்காங்கே மழை பெய்யும். ஆங்காங்கே இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னை மாநகரைப் பொருத்தவரை, வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும்.மாலை அல்லது இரவு நேரங்களில், நகரின் ஒரு சில பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யும். நகரின் அதிகபட்ச வெப்பநிலை 97 டிகிரியாக இருக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மாலை மலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

**கோவையில் வெயில் அதிகமாக இருப்பது ஏன்?**



கோவை, செப். 24–

கோவை என்றாலே இங்கு நிலவும் இதமான தட்பவெப்ப நிலையும், சுவையான சிறுவாணி குடிநீரும் தான்.

ஆனால் கடந்த சில வருடங்களாக கோவையில் வெப்பம் அதிகரித்து வருகிறது. இதற்கு காரணம் மரங்கள் வெட்டப்பட்டு கட்டிடங்கள் அதிகரித்து வருவதுதான் என்றால் அதை மறுப்பதற்கில்லை.

வழக்கமாக கோவையில் செப்டம்பர் மாதம் இதமான காற்று வீசுவதுடன் அவ்வப்போது சாரல் மழையும் பெய்யும்.

ஆனால் இந்த ஆண்டு மழை பெய்யவில்லை. கோடையை மிஞ்சும் வகையில் வெயில் வறுத்தெடுக்கிறது. இதற்கு காரணம் என்ன என்று வானிலை ஆராய்ச்சி மைய அதிகாரிகளிடம் கேட்ட போது அவர்கள் கூறியதாவது:–

வழக்கமாக செப்டம்பர் மாதம் கோவையில் 30 டிகிரி செண்டி கிரேடு வெப்பம் இருக்கும். ஆனால் இந்த ஆண்டு 33 முதல் 35 செண்டிகிரேடு வரை வெப்பம் உள்ளது.

இதற்கு பருவமழை பிந்தியது தான் காரணம். நேற்று நள்ளிரவு சாரல் மழை பெய்துள்ளது. இந்த மழை இன்னும் 3 நாட்களுக்கு பெய்ய வாய்ப்பு உள்ளது.

கோவை மாவட்டத்தில் நேற்று 7 மி.மீ. மழை பதிவாகி உள்ளது. தொடர்ந்து 3 நாட்களுக்கு மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தொடர்ந்து மழை பெய்தால் வெயிலின் தாக்கம் குறைந்து விடும்.

மேலும் வழக்கமாக இந்த சமயத்தில் காற்றின் வேகம் சற்று குறைவாகவே இருக்கும். ஆனால் இந்த ஆண்டு மணிக்கு 13 கி.மீ. வேகத்தில் காற்று வீசுகிறது. இதனால் வாழைகள் முறிந்து விழுவதற்கான வாய்ப்பு உள்ளது. எனவே விவசாயிகள் வாழைகளுக்கு முட்டுக்கொடுத்து அவற்றை சேதமடையாமல் பார்த்துக்கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேற்கண்டவாறு அவர்கள் கூறினார்கள்.